08.12.15

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

## வரலாறு காணாத மழை - வெள்ளம்இயற்கை கற்று தந்த முதல் பாடம்!



'சென்னையில், வரலாறு காணாத வெள்ளப்பெருக்கை ஏற்படுத்திய கனமழை தான், உலக வரலாற்றில் பருவநிலை மாற்றம் கற்றுத் தந்த முதல் பாடம். இனி வரும் ஆண்டுகளில், குறிப்பாக, 2040ம் ஆண்டுக்குள், இதைவிட மோசமான பேரிடர் சம்பவங்கள் வரும்' என, விஞ்ஞானிகள் **எச்சரித்து உள்ளனர்.அண்ணா பல்கலை பருவநிலை ஆராய்ச்சித் துறையின் முன்னாள் இயக்குனரான பேராசிரியர் ராமச்சந்திரன் கூறியதாவது:**இந்த பேரிடரை தவிர்க்கவும் முடியாது; தடுக்கவும் முடியாது. இனி வரும் ஆண்டுகளில், இது போன்ற நிகழ்வுகள் தொடரும். பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் விளைவுகளில் இதுவே முதல் நிகழ்வு. சர்வதேச அளவில், நம் கடலோர மாவட்டங்களில் நடந்த இந்த பேரிடர் தான், உலகிற்கே முதல் பாடம். உலக விஞ்ஞானிகள் இதை ஆராய்ச்சி செய்வதுடன் உன்னிப்பாக கவனித்தும் வருகின்றனர். இந்த ஆண்டு, 'எல் நினோ' எனப்படும், 10 ஆண்டுகளுக்கு

ஒருமுறை வரும் வெப்ப தாக்கத்தால் ஏற்படும் மழை ஆண்டாகும். இதுகுறித்து, ஆண்டின் துவக்கத்திலேயே, பருவநிலை விஞ்ஞானிகள் எச்சரித்து உள்ளனர். சென்னை மற்றும் புறநகர், மழைப்பொழிவு பகுதியாக இருப்பதால், இனி வரும் ஆண்டுகளில் இது போன்ற பேரிடர் அல்லது அதிக மழைப்பொழிவு தொடரும். 2040ம் ஆண்டு அல்லது அதற்கு முன், இதைவிட பல மடங்கு பாதிப்பு வர வாய்ப்புள்ளது; அது, எந்த வகையிலும் சமாளிக்க முடியாத அளவில் இருக்கும். உலக நாடுகள், பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ள தயாராகிவிட்டன. நம் நாட்டிலும், மிக விரைவில் பருவநிலை மாற்றத்தை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை அமல்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**தொடர்வது ஏன்?**

**பருவநிலை மாற்றம் குறித்து, சென்னை பல்கலையின் இயற்கைப் பேரிடர் கல்வித் துறை தலைவர் பேராசிரியர் மாதா சுரேஷ் கூறியதாவது:**பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் காற்றழுத்த தாழ்வுநிலை, ஈரப்பதமான இடங்களைத் தேடிவரும். எல் நினோ தாக்கத்தால், ஒரு காற்றழுத்த தாழ்வுநிலை வரும் போது, வரிசையாக பல காற்றழுத்த தாழ்வு நிலைகள் வரும்; அது தான் இப்போது நடக்கிறது. அதிலும், வங்கக் கடலில் காற்றழுத்த தாழ்வுநிலை வந்துவிட்டால், அது கரையைக் கடப்பதற்கு தாமதமாகும். உலகம் முழுவதும் பருவநிலை மாற்றத்திற்கான மாசு அதிகரிக்கும் போது, அது பசிபிக் பெருங்கடலின் மீது அமெரிக்கப் பகுதியில் தான், 'ஓசோன்' மண்டலத்தை பாதிக்கும். அங்கு பருவநிலை மாறும் போது, இந்தியப் பெருங்கடல் மற்றும் வங்கக் கடலில் உருவாகும் வட கிழக்கு மற்றும் தென் மேற்கு பருவமழையைத் தான் பாதிக்கும்; அதன் துவக்கம் தான் இது.இவ்வாறு அவர் கூறினார்.

## 69 ஆயிரம் டன் பருப்பு கொள்முதல்

ரேஷனில் வழங்க, 69 ஆயிரம் டன் பருப்பு வகைகளை கொள்முதல் செய்ய, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் முடிவு செய்துஉள்ளது. சென்னையில், வெள்ள நீர் புகுந்த வீடுகளுக்கு, ரேஷனில் பருப்பு இலவசமாக வழங்கப்பட

உள்ளது. இதற்காக, 331 கோடி ரூபாய்க்கு, 21 ஆயிரம் டன் உளுத்தம் பருப்பு; 374 கோடி ரூபாய்க்கு, 48 ஆயிரம் டன் துவரம் பருப்பு கொள்முதல் செய்யப்படுகிறது. வெள்ளத்தால், இடம் பெயர்ந்த மக்கள், வீடுகளுக்கு திரும்பிய பின், ரேஷன் கடைகள் வழியாக, இந்தப் பொருட்கள் வினியோகிக்கப்படும்.

**தென் மாவட்டங்களை நோக்கி மழை**



சென்னை: 'வங்க கடலின் தென் மேற்கில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை, தமிழகத்தை நோக்கி நகருவதால், தென் மாவட்டங்களில் கனமழை பெய்யும்' என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து, இம்மையம் வெளியிட்டுள்ள அறிக்கை:குமரி கடலில் மையம் கொண்டிருந்த, காற்றழுத்த தாழ்வு நிலை, மேற்கு நோக்கி நகர்ந்துள்ளது; இதனால், லட்சத் தீவுப் பகுதியில் மழை பெய்யும்.அதேபோல் நேற்று முன்தினம், வங்க கடலின் தென் மேற்கு பகுதியில் உருவான, காற்றழுத்த தாழ்வு நிலை, தமிழகத்தை நோக்கி நகருவதால், தென் மாவட்டங்களில், வட கிழக்கு பருவ மழை தீவிரமடையும்.தமிழக கடலோர பகுதிகளில், ஒரு சில இடங்களில், இன்றும், நாளையும் கனமழை பெய்யும். டிச., 10 மற்றும், 11ம் தேதிகளில், தென் கடலோர மாவட்டங்களான தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருநெல்வேலியில் ஒருசில இடங்களில் கனமழை பெய்யும்.இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பெரியாறு நீர்மட்டம் 142 அடியானது: தமிழகப்பகுதிக்கு கூடுதல் நீர் திறப்பு

கூடலுார்,:பெரியாறு அணை நீர்மட்டம் நேற்று இரவு 142 அடியை எட்டியது. இதனால், ஆணையில் இருந்து தமிழகப்பகுதிக்கு கூடுதல் நீர் திறக்கப்பட்டுள்ளது. பெரியாறு அணை நீர்பிடிப்பில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், அணையின் நீர்மட்டம் உயர்ந்து நேற்று காலை நிலவரப்படி 141.70 அடியாக இருந்தது. நேற்றிரவு 8.30 மணிக்கு 142 அடியை எட்டியது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 2696 கன அடியாகவும், நீர் இருப்பு 7585 மில்லியன் கன அடியாகவும் உள்ளது.அணைக்கு நீர்வரத்து அதிகரித்து இருப்பதால், லோயர்கேம்ப் மின்நிலையத்திற்கு ராட்சத பைப் வழியாக 1400 கன அடியும், குமுளி மலைப்பாதையில் உள்ள இறைச்சல் பாலம் வழியாக 416 கன அடியும் திறந்து விடப்பட்டுள்ளது. இந்த நீர் லோயர்கேம்பில் துவங்கும் பெரியாற்றில் வெள்ளம் போல் வெளியேறுகிறது.இந்நிலையில், அணைக்கு நீர்வரத்து அதிகரித்து இருப்பதால், தமிழகப்பகுதிக்கு கூடுதல் நீர் திறந்து விட்ட போதிலும், அணையில் 142 அடி தண்ணீரை நிலை நிறுத்துவதற்காக, அணையை ஒட்டியுள்ள 13 ஷட்டர்கள் மூலம் கேரள பகுதிக்கு 3,000 கன அடி தண்ணீர் இடுக்கி அணைக்கு திறந்து விடப்பட்டுள்ளது. நீர்பிடிப்பு பகுதியில் மழை குறைந்து 142 அடியிலேயே இருக்கும் பட்சத்தில் கேரள பகுதிக்கு தண்ணீர் திறக்க வேண்டிய அவசியமில்லை.லோயர்கேம்பில் கூடுதல் மின் உற்பத்தி: பெரியாறு அணையில் இருந்து தமிழகப்பகுதிக்கு கூடுதல் நீர் திறந்து விடப்பட்டுள்ளதால், லோயர்கேம்ப் மின் நிலையத்தில் மின் உற்பத்தியும் அதிகரித்துள்ளது. ராட்சத பைப் வழியாக திறந்து விடும் 1400 கன அடி நீர் மூலம், 3 ஜெனரேட்டர்களில் 126 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இடுக்கி கலெக்டர் ஆலோசனை: கேரள பகுதிக்கு திறந்து விடப்பட்ட நீர் வல்லக்கடவு, வண்டிப்பெரியார், உப்புதுறை, சப்பாத்து பகுதிகள் வழியாக சென்று இடுக்கி அணையில் சேரும். திடீரென 3000 கன அடி நீர் திறக்கப்பட்டதால், கரையோரப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடத்திற்கு செல்லவும், அவர்களுக்கு தங்குவதற்கு வசதிகள் செய்து தரவும் இடுக்கி மாவட்ட கலெக்டர்

ரதீசன் உத்தரவிட்டுள்ளார். மேலும் நீர்ப்பாசனத்துறை அதிகாரிகளுடன் ஆலோசனைக்கூட்டம் குமுளியில் நடத்தினார். கேரள பகுதிக்கு திடீரென அதிகபட்சமாக 3000 கன அடி நீர் திறந்து விடப்பட்டதால், கரையோரத்தில் வசிப்பவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை உடனுக்குடன் சீர்படுத்த தனிப்படை அமைக்க இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. இவர்கள் அணையில் நீர்மட்டம் குறையும் வரை 24 மணி நேரமும் கரையோரப்பகுதியில் ரோந்து செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## அமராவதி ஆற்றில் வெள்ளப்பெருக்கு

கரூர்: கரூர் மாவட்டம், அமராவதி ஆற்றில், 22 ஆயிரம் கன அடி நீர் வெளியேறுவதால், பசுபதிபாளையம் பாலம் அடித்து செல்லப்பட்டது.மாவட்ட ஆட்சியர் ஜெயந்தி கூறியதாவது: தொடர் மழை காரணமாக, அமராவதி அணையின் முழு உயரமான, 90 அடியில், 88 அடிக்கு தண்ணீர் உள்ளது. அணையின் பாதுகாப்பு கருதி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, அமராவதி அணைக்கு வரும் உபரிநீர், 22 ஆயிரம் கன அடி வெளியேற்றப்படுகிறது. இதனால், கரையோர பகுதிகளில் உள்ளவர்கள், மேடான பகுதிகளுக்கு செல்லுமாறு எச்சரிக்கப்பட்டு உள்ளனர்.இவ்வாறு அவர் கூறினார்.

## ஜமீன் கூடலூர் ஏரி உடைந்தது: 150 ஏக்கர் பயிர்கள் நாசம்

திருவண்ணாமலை: திருவண்ணாமலை அருகே, கனமழையால் ஏரி திடீரென உடைந்ததால், அப்பகுதியில் உள்ள, 150 ஏக்கர் பயிர்கள் நீரில் மூழ்கி நாசமாயின. இன்னும் பல ஏரிகள், அபாய நிலையில் உள்ளன. திருவண்ணாமலை மாவட்டத்தில், பொதுப்பணித்துறை நிர்வாகத்தின் கீழ், 600 பெரிய ஏரிகள், ஊரக வளர்ச்சித்துறை நிர்வாகத்தின் கீழ், 1,256 ஏரிகள் என, மொத்தம், 1,856 ஏரிகள் உள்ளன. மாவட்டத்தில் உள்ள, 600 பெரிய ஏரிகளில், நேற்றைய நிலவரப்படி, 469 ஏரிகள் முழுமையாக நிரம்பி, அவற்றிலிருந்து உபரிநீர் வெளியேறி வருகிறது. இந்நிலையில், திருவண்ணாமலை அருகேயுள்ள ஜமீன் கூடலூர் கிராரம ஏரியில், நேற்று முன்தினம் மாலை,

திடீரென உடைப்பு ஏற்பட்டது. இதனால், ஏரிக்கரையோரம் உள்ள, 150க்கும் மேற்பட்ட ஏக்கர் விளைநிலங்கள் நீரில் மூழ்கின. இதையறிந்த கிராம மக்கள், ஜல்லி, மரக்கட்டைகள், மணல் மூட்டைகள் ஆகியவற்றை கொண்டு உடைப்பை அடைத்தனர். மாவட்டத்தில் உள்ள ஏரிகளுக்கு தொடர்ந்து நீர்வரத்து உள்ளதால், அபாய நிலையில் உள்ள நீர் நிலைகளை கண்காணித்து, பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என, பொதுமக்கள் வலியுறுத்தி உள்ளனர்.

**நிரம்பியது சாத்தனூர் அணை: வெள்ள அபாய எச்சரிக்கை**

வேலுார்: தொடர் மழை காரணமாக, சாத்தனுார் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. அணை முழுவதுமாக நிரம்பி வழிவதால், உபரிநீர் வெளியேற்றப்படுகிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில் பெய்த கனமழையால், ஏரிகள், குளங்கள், அணைகள் உள்ளிட்ட நீர்நிலைகள் நிரம்பி வழிகின்றன. இங்குள்ள, சாத்தனுார் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. அணையின் மொத்த நீர்மட்டம், 119 அடி. இதில், தற்போது, 118.50 அடி நிரம்பியிருக்கிறது. அணையின் மொத்த கொள்ளளவு, 7,321 மில்லியன் கனஅடி. இதில் தற்போது, 7,209 மில்லியன் கனஅடி நிரம்பியிருக்கிறது. அணைக்கு தற்போது, 4,373 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து வினாடிக்கு, 3,707 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. இதனால், தென்பெண்ணை ஆற்றின் இரு கரைகளையும் தொட்டபடி, வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. இதனால், இந்த ஆற்றங்கரையோரம் வசிக்கும் மக்களை, பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு, அரசு நிர்வாகம் தரப்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**வடகிழக்கு பருவமழை தீவிரமானது! நிலத்தடி நீர் மட்டம் உயரும்**

உடுமலை: உடுமலை சுற்றுப்பகுதியில் பெய்து வரும் தொடர் மழையுடன் பனிப்பொழிவும் இருப்பதால், மக்களின் இயல்பு வாழ்க்கை

பாதிக்கப்பட்டுள்ளது; நிலத்தடி நீர் மட்டம் உயர வாய்ப்புள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். உடுமலை பகுதியில், கடந்த இரண்டு நாட்களாக பருவமழை தீவிரமடைந்துள்ளது. நகரம் மற்றும் கிராமப்பகுதிகளில், சாரலாகவும், குறிப்பிட்ட இடைவெளியில், பலத்த மழையும் பெய்வதால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப் பட்டுள்ளது.

மழையுடன் பனிப்பொழிவும் இருப்பதால், சீதோஷ்ண நிலை குளிர்ச்சியாக மாறியுள்ளது. நேற்றைய காலை நிலவரப்படி உடுமலை நகரில், 48.6 மி.மீ., மழையளவு பதிவாகியுள்ளது. கழுத்தறுத்தான் பள்ளம், தங்கம்மாள் ஓடை, ராஜவாய்க்கால் பள்ளம் ஆகியவற்றில், தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. இதே போல், கிராமப்பகுதிகளிலும், தொடர் மழை இருந்தது. பூலாங்கிணறு பகுதியில், 45 மி.மீ., கோமங்கலம், 35 பெதப்பம்பட்டி, 25.4, வரதராஜபுரம் 40 மி.மீ., மழையளவு பதிவாகியிருந்தது. அதிகப்பட்சமாக, திருமூர்த்தி அணையின் நீர்பிடிப்பு பகுதியான, நல்லாற்றில், 104 மி.மீ., மழை பெய்துள்ளது.

திருமூர்த்தி அணைப்பகுதியில், 63 மி.மீ., அமராவதி அணைப்பகுதியில், 84 மி.மீ., மழை பதிவாகியிருந்தது. நீர்பிடிப்பு பகுதிகளில், மழை தீவிரமடைந்துள்ளதால், இரு அணைகளுக்கும், நீர் வரத்து அதிகரித்துள்ளது. நீண்ட இடைவெளிக்கு பிறகு, உடுமலை சுற்றுப்பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக, ஓடைகளுக்கு, தண்ணீர் வரத்து கிடைத்துள்ளது. உப்பாறு உட்பட ஓடைகளில், சீராக தண்ணீர் வருகிறது. ஏழு குள பாசனத்திற்குட்பட்ட குளங்களுக்கு, திருமூர்த்தி அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால், குளங்கள் வேகமாக நிரம்பி வருகின்றன.

**விவசாயிகள் மகிழ்ச்சி**

வடகிழக்கு பருவமழையை அடிப்படையாகக்கொண்டு, சிறு தானியங்கள், கொண்டைக்கடலை, கொத்தமல்லி, மக்காச்சோளம், சோளம் உட்பட மானாவாரி பயிர்கள், பல ஆயிரம் ஏக்கரில், பயிரிடப்பட்டுள்ளது. பயிரின் வளர்ச்சி தருணத்தில், மழை பெய்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தாழ்வாக அமைந்துள்ள விளைநிலங்களில், தண்ணீர்

தேங்கியுள்ளதால், விவசாயிகள் பயிர்கள் அழுகாமல் இருக்க, தண்ணீரை வெளியேற்றும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கோமங்கலம், கணபதிபாளையம் உட்பட பகுதிகளில், கொண்டைக்கடலை சாகுபடி செய்துள்ள விளைநிலங்களில், தண்ணீர் தேங்கியுள்ளது. பாதிப்புகள் இருந்தாலும், தொடர் மழை காரணமாக, நிலத்தடி நீர் மட்டம் உயரும் வாய்ப்புள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**தவிக்கும் வாகன ஓட்டிகள்**

மழை காரணமாக, உடுமலை நகர ரோடுகள் வழக்கம்போல், சேறும், சகதியுமாக மாறின. பஸ் ஸ்டாண்ட் சிக்னல், தளி ரோடு சிக்னல் பகுதியில், ஏற்பட்டுள்ள மெகா குழிகள் காரணமாக,

வாகன ஓட்டிகள் அவதிக்குள்ளாகினர். திருப்பூர் ரோடு, முழுவதும், சேறாக மாறியதால், வாகனங்கள் ஊர்ந்தபடி அந்த ரோட்டை கடந்து சென்றன.

**வெங்காயம் பயிரிட்ட விவசாயிகளுக்குபாதிப்பு:தொடர் மழையால் அழுகிய அவலம்**



பேரையூர்:மதுரை மாவட்டம் பேரையூர் பகுதியில் தொடர்ந்து பெய்யும் மழையால், சின்ன வெங்காயம் பயிர்கள் அழுகியதால், விவசாயிகளுக்கு

பாதிப்பு ஏற்பட்டுள்ளது.இப்பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் சின்ன வெங்காயம் பயிரிடப்பட்டுள்ளது. கடந்த ஆகஸ்ட் மாதம் சின்னவெங்காயம் அதிக விலை விற்றதால் இதில் ஏராளமான விவசாயிகள் ஆர்வம் காட்டினர். சில மாதங்களுக்கு முன் பயிரிடப்பட்ட பயிர்கள் நன்றாக வளர்ந்து, அறுவடைக்கு தயாராக இருந்தன.சில நாட்களாக மாவட்டத்தில் தொடர்ந்து பெய்யும் மழையால், வெங்காயம் பயிர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

விவசாயி கார்த்திகேயன் கூறியதாவது: சில மாதங்களுக்கு முன்பு சின்ன வெங்காயம் கிலோ ரூ.50 வரை விற்றதால், நான் இரண்டு ஏக்கரில் அதை பயிரிட்டேன். விதைகள், உரம் என ஏக்கருக்கு ரூ.ஒரு லட்சம் வரை செலவானது. பயிர்கள் நன்கு வளர்ந்து, அறுவடைக்கு தயாராக இருந்தன.

இந்நிலையில் இடைவெளியின்றி மழை பெய்ததால், பயிர்கள் தண்ணீர் தேங்கின. வெங்காயத்தாள்களுக்குள்ளும் தண்ணீர் புகுந்ததால், அழுகியுள்ளன. மற்ற விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே வேளாண் துறையினர் இதுகுறித்து கணக்கெடுத்து நஷ்டஈடு வழங்க அரசுக்கு பரிந்துரை செய்ய வேண்டும். அப்போது தான் எதிர்காலத்தில் வெங்காயம் பயிரிட விவசாயிகள் முன்வருவர், என்றார்.

## பருவத்தே பயிர் செய்வோம். அழகுச்செடி வளர்ப்பால் அதிக லாபம்!



கோவை-: பருவகாலங்களின் மாற்றத்திற்கேற்ப அழகுச் செடிகளை சாகுபடி செய்யும் போது, விவசாயிகள் அதிக வருமானம் பெறலாம், என, வேளாண் பல்கலை மலரியல் மற்றும் நிலஎழிலுாட்டும் துறை தெரிவித்துள்ளது.

விளைநிலங்களில், பயிர்களை விளைவிப்பது போன்று, அழகு செடிகளின் சாகுபடியும் தற்போது அதிகரித்து வருகிறது. புதிய ரகம் உருவாக்கல், தரமான உற்பத்தி, சந்தைப்படுத்தல் குறித்த ஆராய்ச்சி தமிழ்நாடு வேளாண் பல்கலை, தாவரவியல் பூங்காவில் நடந்து வருகிறது. வேளாண் பல்கலை, மலரியல் மற்றும் நிலஎழிலுாட்டும் துறை தலைவர் கண்ணன் கூறியதாவது:

ஆண்டுதோறும், முப்பருவத்திலும், மலரின் மகசூலை அதிகரிப்பதற்கான ஆராய்ச்சி நடத்தி வருகிறோம். இதில், குளிர்கால சாகுபடி அழகுச் செடிகளை, நடப்பு மாதம் விதைக்கும் போது, உற்பத்தி அதிகரிக்கும். குளிர்காலத்தில் விளைநிலங்களில், ஜின்னியா, ஹோலி ஹாக், ஹாஸ்டர், பெட்ரீனியா, பிளாக்ஸ் உள்ளிட்ட பல வகையான செடிகளை பயிரிடலாம்.

இவை அனைத்தும், விதையிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது. தவிர, ஓராண்டு பருவமலர்களாக இவற்றை அறுவடை செய்யலாம். இயற்கை முறையிலான வேப்பம்புண்ணாக்கு கரைசல், சூடோமோனஸ் உள்ளிட்டவற்றை பூச்சி கட்டுப்பாட்டுக்காக பயன்படுத்த வேண்டும்.

தவிர, அழகுச் செடிகளை, வீடுகளிலும் வளர்க்க பரிந்துரைக்கப்படுகிறது. பசுமையான சூழலின் நடுவே ஓர் வீடு இருக்கும் போது, அவர்களின் மனதில் புதுவிதமான தன்னம்பிக்கை வளரும். செடிகளை மண் தொட்டிகளில் போதுமான தொழுஉரம், செம்மண் உள்ளிட்டவை போட்டு, நட வேண்டும்.

தண்ணீர் பற்றாக்குறை உள்ள வீடுகளில், தொழு உரங்களுடன் மண் போடுவதை காட்டிலும், தேங்காய் நார் துாள்களை போடலாம். ஏனெனில், இவை நீரை முழுமையாக உறிஞ்சிவிடாமல், தேக்கி வைத்து செடி வளர உறுதுணையாக இருக்கும். இதில், டைபன் பேக்கியா, அர்க்லோனிமா, பில்லோ டெண்டிராம், அடீனியம், டிரசீனா, ஆஸ்பாரகஸ், குளோரோபைடம், பெகோனியா உள்ளிட்ட பல செடிகளை வீடுகளில் வளர்க்கலாம். செடிகளை,

வீட்டின் ஜன்னல்களிலும், மாடிகளிலும் கண்களை கவரும் வகையில் வைக்கலாம். இவற்றை, 10 நாட்களுக்கு ஒரு முறை, அரை மணி நேரம், சூரிய ஒளி வெளிச்சத்தில் வைத்தல் அவசியம்.

மேலும், விவசாயிகள் சாகுபடி செய்வதற்கு முன், பருவத்திற்கான செடிகளை தேர்வு செய்து, பயிரிடுதல் வேண்டும். அப்போதே, அதிக லாபம் பெற முடியும். இவ்வாறு, கண்ணன் கூறினார்.

### சோகத்தில் தக்காளி சாகுபடியாளர்கள்

பொள்ளாச்சி: நெகமம், கிணத்துக்கடவு பகுதியில் பெய்யும் கனமழையில், பூ உதிர்ந்து, செடிகள் அழுகி வருவதால்,'விலையிருந்தும் விளைச்சலை காண முடியாத' நிலைக்கு விவசாயிகள், பெரும் இழப்பை சந்தித்துள்ளனர். நெகமம் பகுதியில் தென்னை சாகுபடி அதிகம் இருந்தாலும், மானாவாரி நிலங்களில் நிலக்கடலை, தென்னை சாகுபடி இல்லாத நிலங்களில், விவசாயிகள் தக்காளி நடவு செய்து வருகின்றனர். தக்காளிக்கு ஓரளவுக்கு விலை இருப்பதால் நெகமம், கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, சுல்தான்பேட்டை மார்க்கெட்களில் விற்பனை செய்கின்றனர். தற்போதைய நிலையில், வானம் பார்த்த மானாவாரி நிலங்களிலும் தக்காளி சாகுபடி நடக்கிறது. கிணத்துக்கடவின் கிழக்குப்பகுதியில் உள்ள வடசித்துார், காரசேரி, பனப்பட்டி, குருநல்லிபாளையம், மன்றாம்பாளையம் பகுதிகளிலும், மேற்கு பகுதியில், உள்ள வீரப்பகவுண்டனுார், சொக்கனுார், முத்துக்கவுண்டனுார், பெரும்பதி, ஜமீன்காளியாபுரம், கல்லாபுரம், வடபுதுார், சிங்கையன்புதுர் உள்ளிட்ட கிராமங்களில் தக்காளி சாகுபடி அதிகளவு நடக்கிறது.

பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்தில், 70 எக்டர் பரப்பளவிலும், கிணத்துக்கடவு ஒன்றியத்தில், 250 எக்டர் பரப்பளவிலும் சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த ஒரு மாதத்துக்கு முன், தக்காளி அறுவடை துவங்கியபோது, வடகிழக்கு பருவமழை துவங்கியது. இம்மழை லேசாக பெய்திருந்தால், வரப்புகளில் மழை நீர் தேங்காமல் இருந்திருக்கும். ஆனால், வரப்புகளில் நீர் தேங்கி வெளியேற

முடியாத அளவுக்கு பலத்த, தொடர் மழை பெய்து வருவதால், செடிகளில் பூக்கள் உதிர்ந்து, காய்கள் கூட அழுக துவங்கி விட்டன. இதனால், பழுத்த பழங்களோடு, செடிகளும் கருகி, அழுகத்துவங்கி விட்டன. தற்போது செடிகளில் இருக்கும் ஒரு சில அழுகாத பழங்களை மட்டும் பறித்து, மார்கெட்டுக்கு கொண்டு வரப்படுகிறது. பலத்த மழைக்கு இடையே, பழுத்த பழங்களுடன், அழுகிய செடிகள் இன்னும் சாகுபடி நிலங்களில் விடப்பட்டுள்ளன. இன்றைய நிலையில், 200 - 350 ரூபாய் வரையில் ஒரு கூடை தக்காளி விற்பனையாகிறது. ஆனாலும், இடைவிடாது பெய்யும் தொடர் மழையால், தக்காளியை அறுவடை செய்ய இயலாமல் பெருத்த இழப்பை சந்தித்துள்ளனர்.

## கால்நடைகளுக்குதடுப்பூசி

திருத்தணி:திருத்தணி ஒன்றியம், தாடூர் மற்றும் செருக்கனுார் ஆகிய இரண்டு ஊராட்சிகளில், நேற்று, திருத்தணி கால்நடை துறையினர், சிறப்பு முகாம் நடத்தி, 1,000 விலையில்லா ஆடுகள், 500 மாடுகளுக்கு தடுப்பூசி போட்டனர்.திருத்தணி ஒன்றியம், தாடூர் ஊராட்சியில், சில தினங்களாக பெய்த கனமழையால், நான்கு விலையில்லா ஆடுகள் இறந்தன. இதையடுத்து, திருத்தணி கால்நடை துறையில், நேற்று, தாடூர், செருக்கனுார் ஆகிய பகுதிகளில் சிறப்பு முகாம் நடத்தினர்.கால்நடை உதவி இயக்குனர் மருத்துவர் செல்லத்துரை தலைமையில், மருத்துவர்கள் தாமோதரன், பாஸ்கர் மற்றும் 10 ஊழியர்கள் சிகிச்சை அளித்தனர். இதில், 1,000 விலையில்லா ஆடுகளுக்கும், 500 மாடுகளுக்கும் தடுப்பூசி போட்டனர்.

## மார்க்கெட் கமிட்டியில் நெல் வரத்து குறைந்தது

விழுப்புரம்: விழுப்புரம் மார்க்கெட் கமிட்டியில் தொடர் மழைக் காரணமாக, விளைபொருட்கள் வரத்து குறைந்தது. விழுப்புரம் மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழைக் காரணமாக, மார்க்கெட் கமிட்டிக்கு தானிய வரத்துகள் அதிகளவு குறைந்துள்ளது. விழுப்புரம் மார்க்கெட் கமிட்டியில், நேற்று

வாரத்தின் முதல் நாளாக இருந்த போதும், வரத்து மிகவும் குறைந்திருந்தது. மொத்தம் 24 மூட்டை நெல் மற்றும் 2 மூட்டை உளுந்து மற்றும் பருத்தி, கம்பு, திணை உள்ளிட்டவை கிலோ கணக்கில் மட்டுமே வரத்து இருந்தது.

நெல் மூட்டைக்கு அதிகபட்ச விலையாக 1,097 ரூபாயும், உளுந்து மூட்டை ஒன்றுக்கு, அதிக பட்ச விலையாக 11 ஆயிரத்து 300 ரூபாயும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. இதனால் மார்க்கெட் கமிட்டியில் நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையிழந்தனர். அதேபோல், மார்க்கெட் கமிட்டி வியாபாரிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## வாழப்பாடி பகுதியில் போதிய மழை இல்லாததால் விவசாயிகள் ஏமாற்றம்

வாழப்பாடி: சேலம் மாவட்டத்தின் மிகப்பெரிய ஏரிகளில் ஒன்றாக விளங்கும் வெள்ளாளகுண்டம் ஏரி, ஏ.என்.மங்களம் ஏரி, வாழப்பாடி சடையன் செட்டியேரி, பாப்பான் ஏரி, அத்தனூர்பட்டி ஏரி, குறிச்சி ஏரி, சேசன்சாவடி ஏரி உட்பட மொத்தம், 18 ஏரிகள் உள்ளன. விவசாய பண்ணை குட்டைகள், ஊராட்சி குட்டைகள் உட்பட, 100க்கும் மேற்பட்ட குட்டைகளும் அமைந்துள்ளன. வாழப்பாடி பகுதியில், போதிய மழையில்லாததால், பருவமழைக் காலம் முடிவதற்குள், பலத்த மழை பெய்து, நீர்நிலைகள் நிரம்ப வேண்டுமென, விவசாயிகளும், கவலையோடு காத்திருக்கின்றனர்.

## 23 ஆயிரம் மண் மாதிரிகள் சேகரிக்க இலக்கு

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 2016-17 ம் ஆண்டில், 23 ஆயிரம் மண் மாதிரிகள் சேகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என, கலெக்டர் ராஜேஸ் கூறினார். பையூர் மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில், உலக மண்வள நாள் விழா நடந்தது. விழாவிற்கு தலைமை வகித்து கலெக்டர் ராஜேஸ் பேசியது: ஆரோக்கியமான மண் மூலம், நஞ்சில்லா விளை பொருட்களை உற்பத்தி செய்ய முடியும். கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நெல், சிறுதானியம், எண்ணெய்வித்துப் பயிர்கள், பருத்தி, கரும்பு, காய்கறிகள் மற்றும்

மலர்கள் 2,55,013 ஹெக்?டரில் சாகுபடி செய்யப்படுகிறது. சாகுபடி பரப்பு தொடர்ந்து குறைந்து வரும் நிலையில், அனைத்து மக்களுக்கும் உணவளிக்க, குறைந்த நிலத்தில் பயிர் சாகுபடி செய்து, உற்பத்தியை பெருக்க வேண்டியது அவசியமாகிறது. மண்ணை பற்றியும் அதன் தன்மையை அறியாமல் தொடர் சாகுபடி செய்வதால், மண்ணின் வளம் குன்றி மகசூல் பாதிப்பு ஏற்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் விவசாயிகள் மண் மாதிரிகளை எடுத்து, ஆய்வு செய்து, அதற்கேற்றார் போல் உரங்களை இட வேண்டும். 2016-17ம் ஆண்டு, 23,039 மண் மாதிரிகள் சேகரம் செய்ய, இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மண்ணின் தன்மைக்கேற்ப பயிரை தேர்ந்தெடுத்து, சாகுபடி செய்து கூடுதல் மகசூல் பெறலாம். மேலும், அங்ககச் சத்தின் அளவை சரியாக பராமரிப்பதன் மூலம், நிலத்தின் நிலையான வளத்தை காக்கலாம். இவ்வாறு பேசினார். பள்ளிக்கல்வித் துறையின் சார்பில், நடுபையூர் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்களின் மண்வளம் குறித்த வில்லுப்பாட்டும், கிருஷ்ணகிரி புனித அன்னாள் மேல்நிலைப்பள்ளி மாணவிகளின், மண் வளம் குறித்த நடன நிகழ்ச்சியும் நடந்தது.

## விதைப்பண்ணை வயல்கள் ஆய்வு

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் பகுதியில் வேளாண்மை துறை, கூட்டுறவு விதை உற்பத்தி சங்கம் மற்றும் தனியார் விதை உற்பத்தி வயல்கள் செயல்பட்டு வருகிறது. இதில் ஏ.எஸ்.டி.,16, ஏ.டி.டி., 38,39,43, கோ(2)50 உள்ளிட்ட நெற்பயிர் ரகங்கள் பயரிட்டுள்ளனர். ஆதார நிலை ஒன்று, இரண்டு மற்றும் சான்று நிலை என, மூன்று நிலைகளில் சாகுபடி செய்கின்றனர். சத்தியமங்கலம் பகுதியில் வரதம்பாளையம், சதுமுகை, டி.ஜி., புதூர் ஆகிய கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள விதைப் பண்ணைகளை கோயமுத்தூர் விதை சான்று இணை இயக்குனர் பழனிச்சாமி ஆய்வு செய்தார். விதை பண்ணைகளில் இருந்த விதைகளை பரிசோதித்தார். பண்ணை உரிமையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு தரமான சான்று விதைகள் உற்பத்தி செய்வது குறித்து ஆலோசனை வழங்கினார். ஈரோடு விதைச்சான்று உதவி இயக்குனர் சின்னசாமி உடனிருந்தார்.

**மழையால் 200 ஏக்கர் நிலக்கடலை முளைப்பு: நிவாரணம் வழங்க விவசாயிகள் கோரிக்கை**

கரூர்: வெள்ளியணை சுற்று வட்டாரத்தில் சாகுபடி செய்யப்பட்டிருந்த, 200 ஏக்கர் நிலக்கடலையில் தண்ணீர் தேங்கியதால் முளைப்பு ஏற்பட்டுள்ளதாக, கலெக்டர் ஜெயந்திடம், விவசாயிகள் மனு அளித்தனர்.

அந்த மனுவில் கூறியிருப்பதாவது: வெள்ளியணை சுற்று வட்டாரத்தில் சின்னமூக்கணாங்குறிச்சி, விஜயபுரம், வெள்ளியணை உள்ளிட்ட பகுதிகளில், 200 ஏக்கரில் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நிலக்கடலை பயிர் அறுவடையை நெருங்கிய நேரத்தில், சமீபத்தில் பெய்த மழையால் வயல்களில் தண்ணீர் தேங்கி நிலக்கடலை செடிகள் அழுகி விட்டது. அழுகாமல் உள்ள செடிகளை பிடிங்கினால், நிலக்கடலை முளைத்து காணப்படுகிறது. செடிகளும் மாட்டு தீவனமாக பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. பறிக்கப்பட்ட நிலக்கடலையும் முளைத்து விட்டது. நிலக்கடலையை விற்பனை செய்ய முடியாது. நிலக்கடலை சாகுபடி செய்யும்போது, ஒரு கிலோ நிலக்கடலை, 110 ரூபாய்க்கு வாங்கினோம். ஒரு ஏக்கரில், 40 கிலோ முதல், 54 கிலோ விதை பயன்படுத்த வேண்டும். ஒரு ஏக்கருக்கு விதை செலவு மற்றும் களை எடுப்பு செலவு என, 15 ரூபாய் வரை செலவிடப்பட்டது. மழையால் நிலக்கடலை முளைப்பால் நிலக்கடலை சாகுபடி செய்த, 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். வேளாண் துறையினர் இப்பகுதியில் பார்வையிட்டு, விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**மல்லிகை செடிகளுக்கு பாதுகாப்பு: மாசியில் அறுவடையால் ஏற்பாடு**

குளித்தலை: குளித்தலை பகுதியில், மல்லிகை செடிகள் நன்கு வளர்ந்துள்ளதால், முதிர்ச்சியடைந்த தலைகளை வெட்டி, அச்செடிகளை விவசாயிகள் கட்டி வைத்துள்ளனர். மேலும், மாசி துவக்கத்தில் மல்லிகை சாகுபடி செய்ய உள்ளதால், அதற்கான ஏற்பாடுகளை செய்கின்றனர். கரூர் மாவட்டம்,

குளித்தலை அடுத்த, தாளியாம்பட்டி, கவுண்டம்பட்டி, நங்கவரம், குறிச்சி, தோகைமலை பகுதியில், விவசாயிகள் மல்லிகை சாகுபடி செய்து வருகின்றனர். தோகைமலை பகுதியில், பருவமழை சரியாக பெய்யாத நிலையில், நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்து விட்டது. இதனால், விவசாய நிலங்களில் பல்வேறு பயிர்களுக்கு தண்ணீர் இல்லாமல், விவசாயிகள் மற்ற பயிர் வகைகளை சாகுபடி செய்வதை வெகுவாக குறைத்துவிட்டனர். வாரத்திற்கு ஒருமுறை மல்லிகை செடிக்கு தண்ணீர் விட்டால் போதும் என்பதால், மாசி முதல், கார்த்திகை வரை, என பத்து மாதங்களாக, மல்லிகை சாகுபடியில் ஆர்வம் காட்டினர். மேலும், ஒரு கிலோ, 100 ரூபாய் முதல் விலை போவதால், சாகுபடி பரப்பை அதிகரித்துள்ளனர். மார்கழி முதல், தை மாதம் வரை, பனிக்காலம் என்பதால், மல்லிகை மலர்கள் மகசூல் வெகுவாக குறைந்துவிடும். இதனால், கார்த்திகை துவக்கத்தில், மல்லிகை செடிகளின் மேல்பகுதியில் முதிர்ச்சியடைந்த தலைகளை வெட்டி, அச்செடிகளை கட்டி வைத்து விடுகின்றனர். இதை மீண்டும், தை இறுதியில், கட்டிய கட்டை நீக்கி உரம் வைப்பர். மாசி துவக்கத்தில் மல்லிலை பூக்கள் அறுவடை துவங்கிவிடும் என்பதால், மல்லிகை செடிகளை விவசாயிகள் பாதுகாத்து வருகின்றனர்.

## மழையால் தேங்கிய மலை வாழைக்காய்

தாண்டிக்குடி:தாண்டிக்குடி கீழ்மலைப்பகுதியில் விளையும் மலை வாழைக்காய், தொடர் மழையால் விவசாய தோட்டங்களில் வெட்டப்படாமல் நிறுத்தப்பட்டுள்ளது. கீழ்மலை பகுதி முழுமையும் விளையும் மலை வாழைக்காய் தாண்டிக்குடி மார்க்கெட்டில் விற்கப்படுவது வழக்கம். கடந்த வாரம் சென்னையில் கொட்டித் தீர்த்த கனமழையால் மழை நீர் புகுந்து சென்னை வாசிகளின் இயல்பு வாழ்க்கை முடங்கியது. அங்கு மலைப்பகுதியிலிருந்து சென்ற வாழைக்காய்கள் தேக்கமடைந்தன. விலையும் சரிவை சந்தித்த நிலையில் வாரத்தில் இருநாள் செயல்பட்ட சந்தை ஒரு நாள் மட்டுமே செயல்பட்டது. இதையடுத்து விளைந்தபின்னும், வாழைத்தார்கள் தோட்டங்களில் வெட்டப்படாமல் நிறுத்தப்பட்டுள்ளது.

வியாபாரி ஒருவர் கூறுகையில், ""வாரம் 60 ஆயிரம் காய்கள் சென்னைக்கு விற்பனைக்கு அனுப்புவது வழக்கம். மழையால் அங்கு வியாபாரம் ஸ்தம்பித்துள்ளது. மழை நின்ற பிறகே வியாபாரம் துவங்கும். இதனால் விவசாயிகள் விளைந்த வாழைத்தார்களை வெட்டாமல் உள்ளனர். அது கருப்பாக உருமாறுவதும், பழுப்பதுமாக உள்ளது, என்றார்.

**உழவர்சந்தைக்கு காய்கறிகள் வரத்து பாதியாக குறைவு**

பழநி: தொடர்மழை காரணமாக பழநி பகுதியில் விளைச்சல் பாதித்ததால், உழவர் சந்தைக்கு காய்கறிகள் வரத்து வெகுவாக குறைந்துள்ளது. பழநி வட்டாரத்தில் கணக்கன்பட்டி, மஞ்சநாயக்கன்பட்டி, மற்றும் எரமநாயக்கன்பட்டி, பொட்டம்பட்டி, ஆயக்குடி, பாலசமுத்திரத்தில் இருந்து ஏராளமான விவசாயிகள் காய்கறிகள், பழங்களை பழநி சண்முகபுரம் உழவர் சந்தைக்கு விற்பனைக்கொண்டு வருகின்றனர். கடந்த அக்டோபரில் தினமும் 16 முதல் 20டன் வரை இங்கு காய்கறி வரத்து இருந்தது. இம்மாதம் மழை காரணமாக அது 12 டன்னாக குறைந்துள்ளது. இரண்டு நாட்களாக தொடர் மழை காரணமாக நேற்று மேலும் 9 டன்னாக குறைந்துள்ளது. விலையில், தக்காளி கிலோ ரூ.36, அவரை ரூ.30, கொத்தமல்லி ரூ.60, முருங்கை ரூ.120 என கடந்தவாரத்தை விட கிலோவிற்கு ரூ.5 முதல் ரூ.10 வரை அதிகரித்துள்ளது. நேற்றைய நிலவரம்: வெங்காயம்-ரூ.50, பெல்லாரி-ரூ.30, உருளைக் கிழங்கு ரூ.30, வெண்டை-ரூ.33, காரட் ரூ.48, காலிபிளவர்-ரூ.15, சுரை-ரூ.15, கத்தரி-ரூ.65க்கு விற்பனையானது. உழவர்சந்தை அதிகாரி ஒருவர் கூறுகையில்,"" தொடர் மழைகாரணமாக சந்தைக்கு தினமும் ஒன்று முதல் மூன்று டன் வரை காய்கறிகள் வரத்து குறைந்து கொண்டே வருகிறது. பிறஇடங்களை விட இங்கு விலைகுறைவு காரணமாக விரைவாக விற்றுவிடுகிறது,'' என்றார்.

**நிரம்பி வழியும் பழநி அணைகள்:வினாடிக்கு 4,500 கனஅடி நீர் திறப்பு:சண்முகநதியில் வெள்ளப்பெருக்கு**

பழநி;பழநி பகுதியில் தொடர் மழைகாரணமாக மூன்று அணைகள் நிரம்பி அதிகபட்சமாக வினாடிக்கு மொத்தம் 4,500 ஆயிரம் கனஅடிக்குமேல் தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

மேற்குத்தொடர்ச்சி மலை கொடைக்கானல், பழநி பகுதியில் தொடர்ந்து மழை பெய்கிறது. இதன் காரணமாக கடந்த 3 நாட்களாக பழநி பகுதியில் மூன்று அணைகளும் நிரம்பி வழிகிறது. பாலாறு- பொருந்தலாறு அணைக்கு அதிகபட்சமாக வினாடிக்கு 2,450 கனஅடி, வரதமாநதி அணைக்கு 1,850 கனஅடி நீர்வருகிறது. அவை சண்முகநதியில் வெளியேற்றப்படுகிறது.

குதிரையாறு அணைக்கு 225கனஅடி தண்ணீர் வருகிறது. உபரிநீர் அமராவதி ஆற்றில் செல்கிறது. புளிமரத்துசெட் பழநி நகராட்சி கோடைகால நீர்த்தேக்கம் மற்றும் பெரும்பாலான குளங்கள் நிரம்பி தண்ணீர் வெளியேறுகிறது. இதனால் பாலசமுத்திரம் மாட்டுப்பாதை ரோட்டில் தண்ணீர் ஓடியது. இதனால் வாகனங்கள் சிரமப்பட்டன. சண்முகநதியில் அதிகபட்சமாக வினாடிக்கு 4 ஆயிரம் முதல் 5 ஆயிரம் கனஅடி வரை தண்ணீர் செல்வதால் கரையோரப்பகுதிகளில் வசிப்பவர்களுக்கு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

பழநியில் நேற்றுமுன்தினம் காலை 8 மணி வரை 19 மி.மீ., நேற்று காலை 8 மணிக்கு 53.5 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. பெரும்பாலான தனியார், அரசு பள்ளிகள் விடுமுறை அறிவிக்கப்பட்டது.

**30 ஆண்டுகளில் மண்ணின் அங்ககச்சத்து 0.81 சதவீதம் சரிவு :ஆய்வில் "பகீர்'**

ராமநாதபுரம்;தமிழகத்தில் 30 ஆண்டுகளில் மண்ணின் அங்ககச்சத்து 0.81 சதவீதம் குறைந்துள்ளது, விவசாயத் துறை ஆய்வில் தெரியவந்துள்ளது.

பயிர்கள் வளர்ச்சியில் அங்ககச் சத்து முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழகத்தில் 1980 ல் அங்ககச்சத்து 1.26 சதவீதமாக இருந்தது. உவர் நிலங்கள் அதிகரிப்பு,

பூச்சிக் கொல்லி மருந்துகள் பயன்பாடு, மண் அரிப்பு, இறுகுதல் போன்ற காரணங்களால் அங்ககச்சத்து கடுமையாக குறைந்துள்ளது. விவசாயத்துறையினர் ஆய்வில் 0.81 சதவீதம் குறைந்து 0.45 ஆக அங்ககச்சத்து உள்ளது தெரியவந்தது. இதையடுத்து களர் உவர் நிலங்களை மேம்படுத்துதல், பூச்சிக் கொல்லி மருந்துகளை குறைத்தல், மண் அரிப்பை தடுத்தல் போன்ற வற்றின் மூலம் அங்ககச்சத்தின் அளவை அதிகரிக்க வேண்டும். இல்லாவிட்டால் இன்னும் 10 ஆண்டுகளில் பயிர்களின் உற்பத்தி திறன் கடுமையாக பாதிக்கும் என, ஆய்வாளர்கள் எச்சரித்தனர்.

வேளாண்மைத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: மண்ணின் அங்ககச்சத்தை செறிவூட்ட அரசு பல முயற்சிகளை எடுத்துள்ளது. மண்ணின் தன்மைக்கு ஏற்ப பயிர்களை சாகுபடி செய்யவும், உவர்நிலம் உள்ள பகுதியில் ஆழ் துளை கிணறுகளை அமைக்க வேண்டாம் எனவும் விவசாயி களிடம் வலியுறுத்தி உள்ளோம். மாநிலம் முழுவதும் மண் மாதிரிகள் பரிசோதனை செய்யப் பட்டு விவசாயிகள் ஒருங்கிணைந்த கையேடு 67.45 லட்சம் பேருக்கு வழங்கப் பட்டுள்ளது. 3 ஆண்டுகளில் மண்வள அட்டை இயக்கத்தின் மூலம் 81.18 லட்சம் மண்வள அட்டைகள் வழங்கப்பட உள்ளன. முதற்கட்டமாக 2015-16 ல் 27.70 லட்சம் அட்டைகள் வழங்கப் பட்டு வருகின்றன," என்றார்.

### ஐந்திணை மரபணு பூங்காவில் டிச., 25 ல் மெகா கண்காட்சி

ராமநாதபுரம்: ராமநாதபுரம் அச்சடிப்பிரம்பு ஐந்திணை மரபணு பூங்காவில் டிச., 25 முதல் டிச., 27 வரை மெகா கண்காட்சி நடக்கிறது.கலெக்டர் நந்தகுமார் கூறியதாவது: ஐந்தினை மரபணு பூங்கா ரூ.7.35 கோடியில் 10 ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு பாலை தினைக்குரிய செடிகள் இடம் பெற்றுள்ளன. பூங்காவிற்கு வரும் சுற்றுலா பயணிகள், மாணவர்களை கவரும் வகையில் தோட்டக் கலைத்துறை சார்பில் மெகா கண்காட்சி நடத்தப்படுகிறது. இவை டிச., 25 முதல் டிச., 27 வரை நடக்கிறது. இதில் ரோஜா கார்னேஷன், ஜெர்பரா, ஆந்தூரியம், லில்லி, ஆர்கிட்ஸ், கிளாடியோலஸ், ஆல்ஸ்ட்ரோமீரியா, டெய்சி போன்ற மலர்களால் ஆன ஏராளமான உருவங்கள்

அமைக்கப்பட உள்ளன. அதேபோல் காய்கறி சிற்பங்களும், இயற்கை காட்சிகளும் இடம்பெறும், என்றார். திருவாடானையில் போலீஸ் ஸ்டேஷன் மாடியில், மகளிர் ஸ்டேஷன் செயல்பட துவங்கியது.

திருவாடானை மகளிர் போலீஸ் ஸ்டேஷனுக்கு சொந்த கட்டடம் இல்லாததால் இதுநாள் வரை வாடகை கட்டடத்தில் இயங்கி வந்தது. இதையடுத்து சொந்த கட்டடம் கட்ட அரசு உத்தரவிட்டது. அதற்கான இடம் கிடைக்காததால் கட்டடம் கட்டும் திட்டம் கிடப்பில் போடபட்டுள்ளது. இந்நிலையில் ராமநாதபுரம் ஏ.டி.எஸ்.பி. வெள்ளத்துரை, மகளிர் ஸ்டேஷனை ஆய்வு செய்தார். புதிய கட்டடம் கட்டும் வரை புதிதாக கட்டபட்டுள்ள திருவாடானை சட்டம்- ஒழுங்கு போலீஸ் ஸ்டேஷன் மாடியில் செயல்பட உத்தரவிட்டார். அதன்படி நேற்றுமுன்தினம் முதல் போலீஸ் ஸ்டேஷன் மாடியில் மகளிர் ஸ்டேஷன் செயல்பட துவங்கியுள்ளது.

**மழையால் மிளகாய் பாதிப்பு**

கீழக்கரை:திருப்புல்லாணி ஒன்றியத்திற்குட்பட்ட பள்ளமோர்க் குளம், கீழச்சீத்தை, உத்தரகோசமங்கை, சுமைதாங்கி, களரி உள்ளிட்ட பகுதிகளில் மிளகாய் செடிகள் பயிரிடப்பட்டுள்ளது. தற்போது பெய்துவரும் தொடர்மழையால் வேர் அழுகல் நோய் தாக்கி மிளகாய் செடிகள் பாதித்துள்ளது. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

மோர்க்குளம் விவசாயி தங்கராஜ் கூறுகையில், ""தொடர்ந்து பெய்துவரும் மழையால் மிளகாய் செடிகள் வீணாகிறது. இதுவரை மூன்று முறை நடவு செய்துள்ளோம். இருந்தும் மிளகாய் செடிகளை பாதுகாக்க முடியவில்லை. பாதிக்கப்பட்ட மிளகாய் விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் கிடைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்," என்றார்.

**விவசாயிகளுக்கு அட்டை**

திருப்புவனம்;கொந்தகை கிராமத்தில் உலக மண்வள தினவிழாவை முன்னிட்டு விவசாயிகளுக்கு மண்வள அடையாள அட்டை வழங்கப்பட்டது. மத்திய மண்வள அடையாள இயக்குநர் அழகப்பன் தலைமையில் நடந்த விழாவில்

வோளாண்மை துணை இயக்குநர் சுரேஷ்பாபு, உதவி வேளாண் அலுவலர் அன்புவேல், வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஜோதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். விவசாயிகள் செயற்கை உரங்களை தவிர்த்து இயற்கை உரங்களை பயன்படுத்த வேண்டும். ஒரு செ.மீ., மண் உருவாக 500 ஆண்டுகளாகும், எனவே மண்ணை நேசிக்க கற்று கொள்ள வேண்டும் என இயக்குநர் அழகப்பன் தெரிவித்தார்.

**உலக மண்வள தின விழா**

அருப்புக்கோட்டை:அருப்புக்கோட்டை வாழ்வாங்கியில், வேளாண்., துறை சார்பாக உலக மண்வள தின விழா நடந்தது. அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றிய தலைவர் யோகவாசுதேவன் தலைமை வகித்தார். துணை தலைவர் கொப்பையராஜ் முன்னிலை வகித்தார். செட்டிகுறிச்சி விவசாயி ராஜேஸ்கண்ணனுக்கு தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 50 சதவீத மானியத்தில் சுழல் கலப்பையை வழங்கினார். வேளாண் அலுவலர்கள் சந்திரசேகரன், ரத்தினகுமார், சந்திரகலா விளக்கினர்.

வேளாண் உதவி அலுவலர் சரவணன் மண்மாதிரி குறித்து செயல் விளக்கம் காண்பித்தார். உயிர் உரங்கள், நுண்ணுரங்கள் மற்றும் உயிரியல் பூச்சிகொல்லி மருந்துகள் தொடர்பான கருத்து மற்றும் கண்காட்சி நடந்தது. செட்டிப்பபடி, பாலவநத்தம், தொட்டியான்குளம் மற்றும் கோபாலபுரம் கிராமங்களில் அந்தந்த உதவி வேளாண் அலுவலர்கள் மூலம் விவசாயிகளுக்கு மண்வள அட்டைகள் வினியோகம் செய்யப்பட்டது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

விவசாயிகளுக்கு மண்வள அட்டை அமைச்சர் சுந்தர்ராஜன் வழங்கினார்



பரமக்குடி

பரமக்குடியில் வேளாண்மை துறை சார்பில் நடந்த மண் வள பாதுகாப்பு தினவிழாவில் விவசாயிகளுக்கு மண்வள அட்டையை அமைச்சர் சுந்தர்ராஜன் வழங்கினார். மண்வள அட்டை பரமக்குடியில் ராமநாதபுரம் மாவட்ட வேளாண்மை துறை சார்பில் மண்வள பாதுகாப்பு தின நிகழ்ச்சி மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடந்தது. அ.தி.மு.க. மாவட்ட செயலாளர் தர்மர், மாவட்ட ஊராட்சி தலைவர் சுந்தரபாண்டியன், நகரசபை தலைவர் கீர்த்திகா முனியசாமி, போகலூர் யூனியன் தலைவர் நாகநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பரமக்குடி வேளாண்மைத்துறை உதவி இயக்குனர் கண்ணையா வரவேற்றார். விழாவில் விவசாயிகளுக்கு மண்வள அட்டை தோட்டக்கலை இயக்க திட்டத்தின் சார்பிலும், விவசாய துறை சார்பிலும் மானியத்துடன் மினி டிராக்டர், பவர் டில்லர், விதைகள் வழங்கப்பட்டன. இவற்றை பயனாளிகளுக்கு அமைச்சர் சுந்தர்ராஜன் வழங்கி பேசியதாவது:- நமது முன்னோர்கள் விவசாயத்தை

நேசித்தனர். இயற்கையான உரங்களை கொண்டு விவசாயத்தையும், மண் வளத்தையும் பேணிக்காத்தனர். தற்போது அந்த நிலை மாறிவிட்டது. நிலத்தின் தரம் அறிந்து அதற்கு ஏற்றாற்போல் உரங்களை இடவேண்டும். அப்போது தான் விவசாயம் செழிக்கும். தமிழகத்தில் முதல்-அமைச்சர் ஜெயலலிதா விவசாய புரட்சி செய்து வருகிறார். அவர் விவசாயிகளின் பாதுகாவலராக திகழ்கிறார். களை எடுப்பதற்கும், விவசாய பணிகளை மேற்கொள்வதற்கும் ஆட்கள் கிடைக்காததால் அனைத்துக்கும் எந்திரம் வழங்கி விவசாயிகளை மேன்மையடைய செய்துள்ளது அ.தி.மு.க. அரசு. விவசாயிகளுக்கு தேவையான இடுபொருட்கள், விதைகள், எந்திரங்கள் போன்றவை மானிய விலையில் வழங்கப்படுகிறது. மண் பரிசோதனை

நிலத்தின் வளத்திற்கேற்ப உரமிட்டால் அதிக உற்பத்தியை பெறலாம். தமிழகத்தில் 30 மண் பரிசோதனை நிலையங்களும், 10 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்களும் அமைக்கப்பட்டு உள்ளன. இதனை விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். விவசாய பொருட்களின் உற்பத்தியை அதிகமாக்க ரசாயன உரங்கள் இடுவதை தவிர்க்க வேண்டும். பண்ணை குட்டை, மாடித்தோட்டம் ஆகியவற்றின் மூலம் விவசாய பொருட்கள் தாமதமின்றி உடனுக்குடன் கிடைக்கிறது. இவ்வாறு அவர் பேசினார். இந்த நிகழ்ச்சியில் அறிவியல் திட்ட ஒருங்கிணைப்பாளர் சீகன்பால், பேராசிரியர் சக்திவேல், ஒன்றிய செயலாளர்கள் முத்தையா, குப்புச்சாமி, முதுகுளத்தூர் கருப்புச்சாமி, மாவட்ட சிறுபான்மை பிரிவு பொருளாளர் அப்துல் மாலிக், பொதுக்குழு உறுப்பினர் நாகராஜன், அண்ணா தொழிற்சங்க செயலாளர் பிரகாசம், நகர் செயலாளர் கணேசன், ஊராட்சி தலைவர்கள் ராஜசெல்வி குருந்தையா, சங்கீதா பழனிச்சாமி, சத்தியகலா பாண்டியன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**தஞ்சை மாவட்டத்தில் தொடர் மழையால் 623 எக்டேர் நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கின**



தஞ்சை மாவட்டத்தில் தொடர் மழையால் 623 எக்டேர் நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன. மழை வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால் தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. வங்ககடலில் புதிதாக உருவாகி வரும் காற்றழுத்த தாழ்வு நிலையால் மழை விட்டு, விட்டு பெய்து வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் தொடர்ந்து பரவலாக மழை பெய்து வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் நேற்று தஞ்சை, திருவையாறு, திருக்காட்டுப்பள்ளி, வல்லம், அய்யம்பேட்டை, மஞ்சளாறு, திருவிடைமருதூர், கும்பகோணம், அணைக்கரை, பட்டுக்கோட்டை, அதிராம்பட்டினம், பேராவூரணி, மதுக்கூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பலத்தமழை பெய்தது. தஞ்சை மாவட்டத்தில் தற்போது சம்பா, தாளடி நெற்பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. இதில் தாழ்வான பகுதிகளில் நடவு செய்யப்பட்டுள்ள நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன. தண்ணீரில் மூழ்கியுள்ள நெற்பயிர்கள் குறித்தும், அழுகியுள்ள நெற்பயிர்கள் குறித்தும் கணக்கெடுக்கும் பணியில் வேளாண்மைத்துறையினர் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று பெய்த மழையினால் தஞ்சை மாவட்டத்தில் பயிர் சேதம் குறித்து கணக்கெடுக்கும் பணி பாதிக்கப்பட்டது. நேற்றுகாலை 11 மணி நேர நிலவரப்படி தஞ்சை மாவட்டத்தில் 623 எக்டேரில் நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன.

நெற்பயிர்கள் அழுகியது தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் வட்டாரத்தில் 52 எக்டேரிலும், பாபநாசம் வட்டாரத்தில் 36.4 எக்டேரிலும், திருவையாறு வட்டாரத்தில் 211 எக்டேரிலும், ஒரத்தநாடு வட்டாரத்தில் 142 எக்டேரிலும், திருவிடைமருதூர் வட்டாரத்தில் 22.1 எக்டேரிலும், பட்டுக்கோட்டை வட்டாரத்தில் 17.84 எக்டேரிலும், அம்மாப்பேட்டை வட்டாரத்தில் 25 எக்டேரிலும், திருப்பனந்தாள் வட்டாரத்தில் 61.7 எக்டேரிலும், பேராவூரணி வட்டாரத்தில் 10 எக்டேரிலும், தஞ்சை வட்டாரத்தில் 10 எக்டேரிலும், மதுக்கூர் வட்டாரத்தில் 35 எக்டேரிலும் நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன. தொடர்ந்து தண்ணீர் தேங்கி நிற்பதால் தஞ்சை மாவட்டத்தில் 70.6 எக்டேரில் நெற்பயிர்கள் முழுமையாக அழுகிவிட்டன. தஞ்சை மாவட்டத்தில் திருவையாறு வட்டாரத்தில் 31 எக்டேரிலும், திருவிடைமருதூர் வட்டாரத்தில் 18.2 எக்டேரிலும், ஒரத்தநாடு வட்டாரத்தில் 12 எக்டேரிலும், பட்டுக்கோட்டை வட்டாரத்தில் 9.4 எக்டேரிலும் நெற்பயிர்கள் அழுகிவிட்டன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**தூத்துக்குடி மாவட்டத்தில் பயிர்களுக்கு காப்பீட்டு திட்டம் கலெக்டர் தகவல்**



தூத்துக்குடி, தூத்துக்குடி மாவட்டத்தில் பயிர்களுக்கு காப்பீட்டு தொகை செலுத்துமாறு கலெக்டர் ம.ரவிகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுபற்றி அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறிஇருப்பதாவது:–

பயிர் காப்பீடு : புயல், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை சீற்றத்தால் பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படும் போதும், பூச்சி நோய் தாக்குதலால் பயிருக்கு சேதம் ஏற்படும் போதும் பயிர்களுக்கு ஏற்படும் மகசூல் குறைவுக்கு நிவாரணம் கிடைக்கும் வகையில் பயிர் காப்பீட்டுத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

தேசிய வேளாண் காப்பீட்டுத்திட்டத்தின் கீழ் நடப்பு 2015–16–ம் ஆண்டு ராபி பருவத்துக்கான நெல், சோளம், கம்பு, கேழ்வரகு, மக்காச்சோளம், எள், சூரியகாந்தி, நிலக்கடலை, உளுந்து, துவரை, பாசிப்பயறு, பருத்தி, கரும்பு, வாழை, மிளகாய், வெங்காயம், மரவள்ளி ஆகிய பயிர்களுக்கு காப்பீட்டுத்தொகை செலுத்துவதற்கு, தேசிய வேளாண் காப்பீட்டு கழகத்தால் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. விண்ணப்பிக்கும் நாள்

இதில் நெல் பயிருக்கு 29.2.2016–ந் தேதிக்குள் அல்லது விதைத்த, நடவு செய்த 1 மாதத்துக்குள் பிரீமியத் தொகை கட்டவேண்டும். கம்பு, சோளம், கேழ்வரகு, மக்காச்சோளம், நிலக்கடலை, எள் ஆகிய பயிர்களுக்கு 31.1.2016–ம் தேதிக்குள் அல்லது பயிர் விதைத்த 1 மாதத்திற்குள் பிரீமியத் தொகை செலுத்த வேண்டும்.

உளுந்து, பாசிப்பயறு, துவரை ஆகிய பயிர்களுக்கு 15.2.2016 அல்லது விதைத்த 1 மாதத்துக்குள் பிரீமியத் தொகை செலுத்த வேண்டும். சூரியகாந்தி பருத்தி, மிளகாய், வாழை, வெங்காயம், மரவள்ளி ஆகிய பயிர்களுக்கு 15.1.2016 அல்லது விதைத்த 1 மாதத்திற்குள் பிரீமியத் தொகை செலுத்த வேண்டும். கரும்பு பயிருக்கு 15.6.2016 அல்லது நடவு செய்த 1 மாதத்திற்குள் செலுத்த வேண்டும். பிரீமியத் தொகை

பயிர்வாரியாக ஒரு ஏக்கருக்கு செலுத்த வேண்டிய காப்பீட்டுத் தொகை விபரம் வருமாறு:–

கடன் பெறும் சிறு மற்றும் குறு விவசாயிகள் மற்றும் இதர விவசாயிகள் நெல் பயிருக்கு ரூ.211–ம், சோளப் பயிருக்கு ரூ.62–ம், கம்பு ரூ.66–ம், கேழ்வரகு ரூ.173–ம், மக்காச் சோளத்திற்கு ரூ.167–ம், பாசிபயறுக்கு ரூ.35–ம், உளுந்துக்கு ரூ.40–ம், துவரைக்கு ரூ.62–ம், சூரியகாந்திக்கு ரூ.116–ம், பருத்திக்கு ரூ.104–ம், மிளகாய் பயிருக்கு ரூ.297–ம், வெங்காயத்துக்கு ரூ.2,190–ம், வாழைக்கு ரூ.6,714–ம், மரவள்ளி கிழங்குக்கு ரூ.2,363–ம், கரும்புக்கு ரூ.2,169–ம், பிரீமியத் தொகையாக செலுத்த கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கடன் பெறாத சிறு மற்றும் குறு விவசாயிகள் நெல் பயிருக்கு ரூ.190–ம், சோளப் பயிருக்கு ரூ.56–ம், கம்பு பயிருக்கு ரூ.59–ம், கேழ்வரகு பயிருக்கு ரூ.156–ம், மக்காச் சோளத்துக்கு ரூ.151–ம், பாசிபயறுக்கு ரூ.31–ம், உளுந்துக்கு ரூ.36–ம், துவரைக்கு ரூ.56–ம், சூரியகாந்திக்கு ரூ.104–ம், பருத்திக்கு ரூ.93–ம் மிளகாய் பயிருக்கு ரூ.267–ம், வெங்காயத்துக்கு ரூ.1,971–ம் வாழைக்கு ரூ.6,042–ம், மரவள்ளிக்கிழங்குக்கு ரூ.2,127–ம், கரும்புக்கு ரூ.1952–ம் செலுத்த கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். <u>வங்கிகளில் செலுத்தலாம்</u>

விவசாயிகள், பிரீமியக் கட்டணத்தை தொடர்புடைய தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் செலுத்தலாம். மேலும், விரிவான விபரங்களுக்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குனரை தொடர்பு கொண்டு பயன்பெறலாம். இவ்வாறு தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் ம.ரவிகுமார் தெரிவித்து உள்ளார்.

**அழுகிய வெங்காய செடிகளுடன் வந்த விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.30 ஆயிரம் இழப்பீடு தொகை வழங்க கோரிக்கை**



திருச்சி கலெக்டர் அலுவலகத்தில் நடந்த குறைதீர்க்கும் நாள் கூட்டத்திற்கு, மழைநீரில் மூழ்கி அழுகிய வெங்காய செடிகளுடன் வந்த விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.30 ஆயிரம் இழப்பீடு வழங்க கோரி மனு கொடுத்தனர். குறைதீர்க்கும் நாள் கூட்டம் : திருச்சி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில்

நேற்று பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது. மாவட்ட கலெக்டர் கே.எஸ். பழனிச்சாமி, மாவட்ட வருவாய் அதிகாரி தர்ப்பகராஜ் மற்றும் அதிகாரிகள் பொதுமக்களிடம் இருந்து மனுக்களை வாங்கினார்கள்.

அப்போது துறையூர் ஊராட்சி ஒன்றிய பகுதியை சேர்ந்த செல்லி பாளையம், அம்மன்பாளையம், ரெங்கநாதபுரம், நாகலாபும், மருவத்தூர், கீரம்பூர், செங்காட்டுப்பட்டி ஆகிய கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் கையில் அழுகிய நிலையில் இருந்த வெங்காய செடிகளுடன் வந்தனர். துறையூர் பகுதியில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து அடைமழை பெய்து வந்ததால் அறுவடைக்கு முன்பாகவே வெங்காய செடிகள் அனைத்தும் அழுகி விட்டதாகவும் அவர்கள் வேதனையுடன் கூறினார்கள். அவர்களுடன் வந்த தமிழக ஏரி மற்றும் ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்க மாநில தலைவர் விசுவநாதன் கூறுகையில் ‘துறையூர் பகுதியில் சுமார் 1000 ஏக்கரில் மழையால் வெங்காய பயிர்கள் அழுகி விட்டது. ஒரு ஏக்கருக்கு சுமார் ரூ.30 ஆயிரம் முதல் 40 ஆயிரம் வரை கடன் வாங்கி விவசாயிகள் பயிர் செய்த வெங்காயம் அறுவடைக்கு 20 நாட்களுக்கு முன்பாக அழுகி போய்விட்டது. இதனால் பாதிக்கப்பட்டு உள்ள விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.30 ஆயிரம் இழப்பீடு வழங்கவேண்டும். மாவட்ட கலெக்டர் அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்யவேண்டும்’ என்றார். குளப்பில் குப்பை : தண்ணீர் அமைப்பின் சார்பில் அதன் தலைவர் சேகரன், செயலாளர் நீலமேகம் ஆகியோர் கொடுத்த மனுவில் திருச்சி மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட பொன்னேரிபுரம் மாவடி குளம் கடந்த 2013-ம்ஆண்டு தன்னார்வலர்களின் முயற்சியால் தூர்வாரப்பட்டது. ஆக்கிரமிப்புகளும் அகற்றப்பட்டன. ஆனால் தற்போது மாவடி குளத்தில் குப்பைகள் கொட்டப்பட்டு வருகிறது. இந்த குளத்திற்கான வரத்து வாய்க்கால்களிலும் குப்பை கொட்டி தண்ணீர் வர விடாமல் தடுக்கிறார்கள். எனவே வரத்து வாய்க்கால்களை போர்க்கால அடிப்படையில் தூர்வார நடவடிக்கை எடுக்கவேண்டும் என கூறி இருந்தனர். அடகு கடைகளுக்கு பாதுகாப்பு திருவெறும்பூர் தாலுகா நகை அடகு பிடிப்போர் நல சங்கம் சார்பில் அதன் செயலாளர் பத்மநாபன் கொடுத்த மனுவில் திருவெறும்பூர் பகுதியில் சுமார் 60 அடகு கடைகள் உள்ளன. நாங்கள் அரசின் அங்கீகாரம் பெற்று தொழில்

செய்து வருகிறோம். நாங்கள் நகை வாங்குவதோ, விற்பனை செய்வதோ கிடையாது. நகை ஈட்டின் பேரில் கடன் மட்டுமே வழங்கி வருகிறோம். ஆனால் போலீசார் நாங்கள் திருட்டு நகை வாங்கியதாக கூறி மிரட்டுகிறார்கள். அவர்கள் கேட்கும் நகையை கொடுக்கவில்லை என்றால் வழக்கு போடுவோம் என மிரட்டுகிறார்கள். எங்களுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டிய போலீசாரே இப்படி செய்தால் நாங்கள் எப்படி தொழில் செய்வது? எங்கள் வாழ்வாதாரத்துக்கு மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் நாங்கள் அங்கீகார சான்றிதழ்களை திரும்ப செலுத்துவதை தவிர வேறு வழி இல்லாமல் போய்விடும் என கூறப்பட்டு உள்ளது. தியாகி போராட்டம் : மணப்பாறை சேது ரத்தின புரத்தை சேர்ந்த சுந்தரம் (வயது86) என்பவர் தனக்கு சுதந்திர போராட்ட தியாகிக்கான ஓய்வூதியம் வழங்க கோரி கடந்த 2005-ம்ஆண்டில் இருந்து கோரிக்கை வைத்து வருவதாகவும், சுதந்திர போராட்ட வீரருக்கான அடையாள அட்டைகள் கடந்த 1972-ம்ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தில் அடித்து சென்று விட்டதால் மணப்பாறை தாசில்தார் விசாரணை நடத்தி அளித்த அறிக்கையின் அடிப்படையில் மாவட்ட கலெக்டர் சிபாரிசு செய்யவேண்டும் என கோரி கலெக்டர் அலுவலக வளாகத்தில் உண்ணாவிரதம் இருந்தார். இதுபற்றிய தகவல் அறிந்ததும் போலீசார் அவரை கலெக்டரிடம் அழைத்து சென்றனர். கலெக்டர் இதுபற்றி விசாரணை நடத்தப்படும் என கூறியதை தொடர்ந்து தியாகி சுந்தரம் தனது போராட்டத்தை கைவிட்டு சென்றார்.

**அமராவதி அணையில் உபரி நீர் திறந்து விடப்படுவதால் காவிரி, கொள்ளிட கரையோர பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை கலெக்டர் அறிவிப்பு**



திருச்சி,

அமராவதி அணையில் இருந்து உபரி நீர் திறந்து விடப்படுவதால் காவிரி, கொள்ளிடம் ஆறுகளின் கரையோர பகுதி மக்களுக்கு திருச்சி மாவட்ட கலெக்டர் பழனிச்சாமி வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்து உள்ளார். ஏரி, குளங்களில் நீர்மட்டம் உயர்வு : தமிழகத்தில் இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து உள்ளது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு தமிழகம் முழுவதும் பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது. வரலாறு காணாத பேய்மழை பெய்ததால் சென்னை மாநகரமே வெள்ளத்தில் மிதக்கிறது. கடலூர், திருவள்ளூர், காஞ்சீபுரம் மாவட்டங்களிலும் ஆறுகள், ஏரிகள் நிரம்பியதால் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடி கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தி உள்ளது. காவிரி டெல்டா மாவட்டங்களிலும் கடந்த மாதம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. இதன் காரணமாக ஏரி, குளங்களில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. அமராவதி அணை உபரி நீர் திறப்பு : இந்நிலையில் தென்மேற்கு வங்க கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ளதால் திருச்சி, கரூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் ஈரோடு, திருப்பூர் மாவட்டங்களில் கடந்த 2 நாட்களாக தொடர்ந்து அடைமழை பெய்து வருகிறது.

இதன் காரணமாக உடுமலை அருகே உள்ள அமராவதி அணை நிரம்பி உள்ளது. அணையின் பாதுகாப்பு கருதி உபரி நீர், அமராவதி ஆற்றில் திறந்து விடப்பட்டது. இந்த தண்ணீர் கரூர் மாவட்டம் திருமுக்கூடலூர் பகுதியில் காவிரி ஆற்றில் கலக்கிறது.இந்த நிலையில் காவிரி ஆற்றில் அமராவதி தண்ணீர் கலந்து மாயனூர் தடுப்பணையை வந்தடைந்தது.

முக்கொம்பு வந்தடைந்தது : பின்னர் திருச்சி மாவட்டம் முக்கொம்பு மேலணைக்கு நேற்று காலை வந்தது. அமராவதி தண்ணீர் முக்கொம்பு மேலணையில் உள்ள அனைத்து மதகுகளின் வழியாக வெளியேற்றப்பட்டு வருகிறது. முக்கொம்பு மேலணையில் இருந்து வினாடிக்கு 8 ஆயிரத்து 585 கன அடி தண்ணீர் வெளியேறுகிறது. தொடர்ந்து மழை பெய்தால் முக்கொம்புக்கு வரும் தண்ணீரின் அளவு இன்னும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

வெள்ள அபாய எச்சரிக்கை : அமராவதியிலிருந்து வரும் நீர் முக்கொம்பில் இருந்து திறந்து விடப்பட்டு இருப்பதால் பொதுமக்கள் நலன் கருதி திருச்சி மாவட்ட கலெக்டர் பழனிச்சாமி வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்து உள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டு உள்ள ஒரு அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:- தமிழகத்தில் தற்போது வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து மழைநீர் அதிகரித்து வருவதால் அமராவதி அணையில் இருந்து உபரி நீர் காவிரி மற்றும் கொள்ளிடத்தில் திறந்து விடப்பட்டுள்ளது. எனவே காவிரி மற்றும் கொள்ளிடம் ஆற்றின் கரையோரம், தாழ்வான பகுதிகளில் வசிக்கும் கரையோர மக்கள், சலவைத் தொழிலாளர்கள் ஆற்றில் குளிக்கவோ, துணி துவைக்கவோ செல்ல வேண்டாம். குழந்தைகளையும் செல்ல அனுமதிக்க வேண்டாம் மற்றும் கால்நடைகளையும் அனுப்ப வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது

.

**அறந்தாங்கி பகுதியில் விடிய விடிய பலத்த மழை மாட்டுச்சந்தையில் வியாபாரம் பாதிப்பு**



அறந்தாங்கி,

அறந்தாங்கி பகுதியில் விடிய விடிய மழை கொட்டித் தீர்த்தது. இந்த மழையின் காரணமாக வியாபாரிகள் குறைவாக வந்ததால், அறந்தாங்கி மாட்டுச் சந்தையில் வியாபாரம் பாதிக்கப்பட்டது. மாட்டுச்சந்தை

அறந்தாங்கியில் தஞ்சாவூர் சத்திரம் நிர்வாகத்திற்கு சொந்தமான இடத்தில் திங்கட்கிழமை தோறும் மாட்டுச்சந்தையும், செவ்வாய்க்கிழமை தோறும்

காய்கறி, பழங்கள் உள்ளிட்ட பல்வேறு வகையான பொருள்கள் விற்பனையாகும் வாரச்சந்தையும் நடக்கிறது. இந்நிலையில் நேற்று அறந்தாங்கியில் மாட்டுச்சந்தை நடைபெற்றது. அறந்தாங்கி பகுதியில் தொடர்ந்து பெய்து வரும் மழையின் காரணமாகவும், நேற்று முன்தினம் மற்றும் நேற்றுகாலை தொடர்ந்து மழை பெய்து வந்த காரணத்தாலும், அறந்தாங்கி மாட்டுச்சந்தைக்கு வழக்கத்தைவிட குறைவான மாடுகளும், மேலும் மாடுகளை வாங்க குறைவான வியாபாரிகளுமே வந்திருந்தனர்.

விற்பனை பாதிப்பு வியாபாரிகள் குறைவாக வந்த காரணத்தால், சந்தையில் மாடுகளின் விற்பனை பெருமளவு பாதிக்கப்பட்டது. மேலும் தொடர்ந்து மழை பெய்து கொண்டிருந்ததால், வியாபாரிகள் குடைகளை பிடித்தவாறு மாட்டு வியாபாரத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து மழை பெய்தததால் சந்தைப்பேட்டை முழுவதும் சேறும்–சகதியுமாக மாறியது. இதனால் வியாபாரிகள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகினர்.

## செயற்கை கருவூட்டப்பட்ட பசுமாடு 2 கன்றுகள் ஈன்றது



பவானிசாகர்,

சத்தியமங்கலம் அருகே செயற்கை முறையில் கருவூட்டப்பட்ட பசுமாடு 2 கன்றுக்குட்டிகளை ஈன்றது. 2 கன்றுக்குட்டிகளை ஈன்றது தேசிய பால்வள வம்சாவளி கருவூட்டல் திட்டத்தின் கீழ் உயர்ரக காளை

மாடுகளின் விந்தணுக்கள் எடுக்கப்பட்டு பசு மாடுகளின் உடலில் ஊசி மூலம் செலுத்தப்பட்டு செயற்கை முறையில் கருவூட்டப்பட்டு வருகிறது. அதன்படி சத்தியமங்கலம் பகுதியில் உள்ள 50 பசு மாடுகளுக்கு காளை மாடுகளின் விந்தணுக்கள் செலுத்தப்பட்டது. இதேபோல் அரியப்பம்பாளையத்தை சேர்ந்த ராசு என்கிற பழனிச்சாமி என்பவர் வளர்த்து வரும் பசு மாட்டுக்கும் செயற்கை முறையில் கருவூட்டப்பட்டது. இதைத்தொடர்ந்து சினையாக இருந்த பசுமாடு நேற்று முன்தினம் இரவு ஒரு கன்றுக்குட்டியை ஈன்றது. பின்னர் 10 நிமிடம் கழித்து மற்றொரு கன்றுக்குட்டியையும் ஈன்றது. செயற்கை முறையில் கருத்தரித்து 2 கன்றுக்குட்டிகளை ஈன்ற மாட்டை அரியப்பம்பாளையம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க செயலாளர் வேலுசாமி மற்றும் அந்த பகுதியை சேர்ந்த பொதுமக்கள் ஆச்சரியத்துடன் சென்று பார்த்தனர். செயற்கை முறையில்... இதுகுறித்து தேசிய பால்வள வம்சாவளி திட்டத்தின் மேற்பார்வையாளர் ஆர்.சம்பத்குமார் கூறும்போது, 'மாடுகள் இனப்பெருக்கம் செய்யும் போது ஏற்படும் கருக்கலைப்பை தடுப்பதற்காக உயர்ரக காளை மாடுகளில் இருந்து எடுக்கப்பட்ட விந்தணுக்கள் பசு மாடுகளின் உடலில் செலுத்த முடிவு செய்யப்பட்டது. அதன்படி தேசிய பால்வள வம்சாவளி திட்டத்தின் கீழ் இந்திய அளவில் தரமிக்க காளை மாடுகளிடம் இருந்து விந்தணுக்கள் எடுக்கப்பட்டு பசு மாடுகளின் உடலில் செலுத்தி கருவூட்டப்படுகிறது' என்றார்.

**குடகனாறு அணையின் நீர்மட்டம் 20 அடியாக உயர்வு வெள்ள அபாய எச்சரிக்கை**



வேடசந்தூர் அருகே உள்ள குடகனாறு அணையின் நீர்மட்டம் 20 அடியாக உயர்ந்துள்ளது. எனவே கரையோரத்தில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குடகனாறு அணை : திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் அருகே அழகாபுரியில் குடகனாறு அணை உள்ளது. இந்த அணைக்கு மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியில் 'மழை பெய்தால் சந்தனவர்த்தினி ஆறு, வரட்டாறு, மான்கோம்பை ஆறு, மாங்கரை ஆறு மற்றும் ஆத்தூர் காமராஜர் அணை ஆகியவற்றில் இருந்து தண்ணீர் வரும். வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பு அணையின் மொத்த கொள்ளவான 27 அடிக்கு 10.01 அடி தண்ணீர் மட்டுமே இருந்தது. அணையின் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை பெய்ததாலும், ஆத்தூர் அணை நிரம்பி கடந்த சில தினங்களாக உபரி நீர் வந்ததாலும் இந்த அணையின் நீர் மட்டம் மள, மள என்று உயர்ந்து வருகிறது. 20 அடியாக உயர்வு : நேற்று மாலை நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு 1,300 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. தற்போது அணையின் நீர்ட்டம் 20 அடியாக உயர்ந்துள்ளது. தொடர்ந்து தண்ணீர் வந்து கொண்டு இருப்பதால் இந்த அணை முழு கொள்ளளவை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே வேடசந்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் செல்வா தலைமையில், பேரூராட்சி பணியாளர்கள் குடகனாறு கரையோரம் உள்ள குங்குமக்காளியம்மன்கோவில், அண்ணாநகர், மார்க்கெட் ரோடு, ராஜாகோபாலபுரம் ஆகிய பகுதிகளுக்கு சென்று தண்டோரா போட்டு மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு எச்சரிக்கை விடுத்தனர். அழகாபுரி குடகனாறு அணை நிரம்பினால் திண்டுக¢கல் மாவட்டத்தில் 3,663 ஏக¢கர் விவசாய நிலமும், கரூர் மாவட்டத்தில் 5,337 ஏக¢கர் விவசாய நிலமும் பயன் பெறும். மேலும் அணையை சுற்றியுள்ள பகுதியில் நிலத்தடி நீர்மட்டமும் உயரும். தரைப்பாலம் அடித்து செல்லப்பட்டது. தாடிக்கொம்புவை அடுத்த ஆத்துப்பட்டியில் குடகனாற்றின் குறுக்கே தற்காலிகமாக மண்பாலம் அமைக்கப்பட்டு இருந்தது. இந்த பாலம் குடகனாற்றில் ஏற்பட்ட வெள்ளத்தால் திடீர் என்று அடித்து செல்லப்பட்டது. இதன் காரணமாக ஆத்துப்பட்டி துண்டிக்கப்பட்டது. இது பற்றிய தகவல்

கிடைத்ததும் ஆத்தூர் எம்.எல்.ஏ.வும், முன்னாள் அமைச்சருமான ஐ.பெரியசாமி விட்டல்நாயக்கன்பட்டிக்கு வந்து ஆத்துப்பட்டி தரைப்பாலத்தை பார்வையிட்டார்.

**விருதுநகர் மார்க்கெட் நிலவரம்: உளுந்து, பாசிப்பயறு விலை குறைவு வரத்து அதிகரிப்பே காரணம்**



விருதுநகர்

விருதுநகர் மார்க்கெட்டில் வரத்து அதிகரிப்பின் காரணமாக உளுந்து, பாசிப்பயறு ஆகியவற்றின் விலை குறைந்துள்ளது. உளுந்து : விருதுநகர் மார்க்கெட்டில் உளுந்து குவிண்டாலுக்கு 100 கிலோ மூடைக்கு ரூ.500 விலை குறைந்து ரூ.10,000 முதல் ரூ.11,000 வரையிலும், உருட்டு உளுந்தம் பருப்பு ரூ.13,300 முதல் ரூ.14,400 வரையிலும், தொலி உளுந்தம் பருப்பு ரூ.11,300 முதல் ரூ.12,000 வரையிலும் விற்பனை ஆனது. துவரை 100 கிலோ மூடைக்கு ரூ.10,500 முதல் ரூ.11,200 வரையிலும், துவரம் பருப்பு ரூ.14,500 முதல் ரூ.14,800 வரையிலும் விற்பனை ஆனது. பாசிப்பயறு 100 கிலோ மூடைக்கு ரூ.1000 விலை குறைந்து ரூ.10,100 முதல் ரூ.11,000 வரையிலும், பாசிபருப்பு 100 கிலோ மூடைக்கு ரூ.12,500 முதல் ரூ.12,900 வரையிலும் விற்பனை செய்யப்பட்டது. வரத்து அதிகரிப்பின் காரணமாகவே உளுந்து மற்றும் பாசிப்பயறு விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. மல்லி லயன் ரகம் 40 கிலோ

மூடைக்கு ரூ.4,500 முதல் ரூ.4,800 வரை விற்பனை ஆனது. வத்தல் (குவிண்டாலுக்கு) சம்பா ரகம் ரூ.11,700 முதல் ரூ.12,300 வரையிலும், ஏ.சி. வத்தல் ரூ.10,400 முதல் ரூ.11,400 வரையிலும், முண்டு வத்தல் குவிண்டாலுக்கு ரூ.8,000 முதல் ரூ.9,000 வரையிலும், சோடை வத்தல் ரூ.1,300 முதல் ரூ.1,500 வரையிலும் விலை சொல்லப்பட்டது. கடலை எண்ணெய் விருதுநகர் எண்ணெய் மார்க்கெட்டில் கடலை எண்ணெய் 15 கிலோவுக்கு ரூ.130 விலை குறைந்து ரூ.1,720 ஆகவும், தேங்காய் எண்ணெய் ரூ.1,605 ஆகவும், சூரியகாந்தி எண்ணெய் ரூ.1,350 ஆகவும் விற்பனை ஆனது.

நிலக்கடலை பருப்பு 80 கிலோ மூடைக்கு ரூ.100 விலை குறைந்து ரூ.4,800 ஆகவும், கடலை புண்ணாக்கு 100 கிலோ மூடைக்கு ரூ.4,500 ஆகவும், எள் புண்ணாக்கு 65 கிலோ ரூ.2,090 ஆகவும் விற்பனை ஆனது. பாமாயில் 15 கிலோவுக்கு ரூ.60 விலை குறைந்து ரூ.740 ஆகவும், நல்லெண்ணெய் 15 கிலோ ரூ.2,890 ஆகவும் விற்பனை செய்யப்பட்டது. சீனி விருதுநகர் சீனி மார்க்கெட்டில் சீனி குவிண்டாலுக்கு ரூ.2,970 ஆகவும், கொண்டைக் கடலை குவிண்டாலுக்கு ரூ.5,300 ஆகவும், பொரிகடலை 55 கிலோவுக்கு ரூ.4,060 ஆகவும், பட்டாணி 100 கிலோ ரூ.2,825 ஆகவும், பட்டாணி பருப்பு ரூ.2,850 முதல் ரூ.3,800 வரையிலும், மசூர் பருப்பு ரூ.6,100 முதல் ரூ.6,200 வரையிலும், ரவை 90 கிலோவுக்கு ரூ.3,215 ஆகவும், மைதா 90 கிலோ ரூ.2,995 ஆகவும் விற்பனை செய்யப்பட்டது.

விருதுநகர் காபி மார்க்கெட்டில் காபி பிளாண்டேசன் பிபி ரகம் 50 கிலோ ரூ.13,000 ஆகவும், ஏ ரகம் ரூ.15,750 ஆகவும், சி ரகம் ரூ.10,500 ஆகவும், ரோபஸ்டா பிபி ரகம் ரூ.6,650 ஆகவும், பிளாக் பிரவுன் ரகம் ரூ.6,200 ஆகவும் விற்பனை ஆனது.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**பருத்தி விவசாயிகளுக்கு நேரடி மானியம்: தென்னிந்திய பஞ்சாலைகள் சங்கம் வரவேற்பு**

மத்திய அரசு அறிவித்துள்ள பருத்தி விவசாயிகளுக்கான நேரடி மானியத் திட்டத்தை தென்னிந்திய பஞ்சாலைகள் சங்கம் (சைமா) வரவேற்றுள்ளது.

இதுகுறித்து சங்கத்தின் தலைவர் எம்.செந்தில்குமார் திங்கள்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கை: ஜவுளி உற்பத்திப் பொருள்களின் விலையை பெரும்பாலும் பருத்தியே நிர்ணயம் செய்யும் நிலையில், கடந்த 2010-11 ஆம் ஆண்டில் பருத்தி விலையில் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு ஏற்ற, இறக்கங்கள் ஏற்பட்டன. இதனால் அப்போது இந்திய ஜவுளித் தொழில் சுமார் ரூ. 11 ஆயிரம் கோடி அளவுக்கு நடப்பு மூலதன நிதியை இழந்தது.

இந்திய பருத்திக் கழகம் பருத்திக்கு ஏற்படுத்திய குறைந்தபட்ச விலையால் போக்குவரத்து, மேலாண்மை செலவுகள், அதிகமான வட்டி போன்றவற்றின் மூலம் அரசுக்கும் தொழில் துறையினருக்கும் இழப்பு ஏற்படுகிறது. எனவே, எப்போதெல்லாம் பருத்தியின் விலை குறைந்தபட்ச விலைக்கு கீழாக செல்கிறதோ அப்போது அந்த விலைக்கும், சந்தை விலைக்கும் உள்ள வித்தியாசத்தை அரசு நேரடி மானியமாக விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என்று நாங்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தோம்.

இந்த நிலையில் நேரடி மானியத் திட்டத்தை மத்திய ஜவுளித் துறை இணை அமைச்சர் சந்தோஷ்குமார் காங்வார் திங்கள்கிழமை அறிவித்துள்ளார். இதன் மூலம் விவசாயிகளுக்கும் தொழில் துறையினருக்கும் நன்மை கிடைக்கும்.

சீனாவில் பருத்திக்கு குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்யப்பட்டபோது சீன பருத்தி சேமிப்புக் கழகம் இழப்பை சந்தித்தது. இதையடுத்து அறிவிக்கப்பட்ட நேரடி மானியத் திட்டத்தால் சீனாவின் நூல் மில்களுக்கு சந்தை விலையில் பருத்தி கிடைத்தது. இதுபோன்ற ஒரு நிலை இந்தியாவிலும் உருவாகி இருதரப்பினருக்கும் நன்மை கிடைக்கக் கூடிய நிலை உருவாகியிருப்பதாகத் தெரிவித்துள்ள செந்தில்குமார், இந்தத் திட்டத்தை சிறப்பான முறையில் செயல்படுத்த வேண்டும் என்று ஜவுளித் துறை ஆணையருக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

**பரமக்குடி பகுதியில் தொடர் மழை: விவசாயப் பணிகள் தீவிரம்**

பரமக்குடி வட்டாரத்தில் கடந்த 2 நாள்களாக தொடர் மழை பெய்து வருவதைத் தொடர்ந்து அப்பகுதிகளில் விவசாயப் பணிகள் தீவிரமடைந்துள்ளன.

கடந்த சில நாள்களுக்கு முன் பெய்த மழையால் விவசாயிகள் மானாவாரி நெல் சாகுபடி மற்றும் மிளகாய் நடவுப் பணிகளை மேற்கொண்டு வந்தனர். இந்நிலையில் கடந்த 2 நாள்களாக பரவலாக தொடர்ந்து மழை பெய்து வருவதையடுத்து இப்பகுதிகளில் உள்ள கண்மாய்களுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. மேலும் கடந்த நவ. 28ஆம் தேதி முதல் வைகை அணையிலிருந்து ராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களுக்கு பாசனநீர் திறந்து விடப்பட்டது. இது ராமநாதபுரம் பெரிய கண்மாய்க்கு வந்து சேர்ந்ததையடுத்து, வைகை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள தடுப்பணைகளின் வழியாக மாவட்டத்தில் உள்ள 207 கண்மாய்களுக்கும் தண்ணீரை கொண்டு செல்ல பொதுப்பணித் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். தற்போது அனைத்து கண்மாய்களும் நிரம்ப வாய்ப்புள்ளதால் விவசாயிகள் விவசாயப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

தேவகோட்டை: தேவகோட்டை சுற்றுவட்டார பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை முதல் தொடர்ந்து சாரல் மழை பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**உலக மண் வள தினம்**

வெள்ளக்கோவில் வட்டாரத்தைச் சேர்ந்த மங்களப்பட்டியில் அரசு வேளாண்மைத் துறை சார்பில் உலக மண் வள தினம் சனிக்கிழமை கொண்டாடப்பட்டது.

இதற்கு, ஊராட்சி ஒன்றியக் குழுத் துணைத் தலைவர் ஏ.எஸ்.ராமலிங்கம் தலைமை வகித்தார். பல்லடம் நடமாடும் மண் பரிசோதனை நிலைய அலுவலர் கே.சுரேஷ், வட்டார வேளாண்மை அலுவலர் பி.சாலினி, முத்தூர் துணை வேளாண்மை அலுவலர் கே.வி.விஸ்வநாதன் முன்னிலை வகித்தனர்.

வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஆர்.சீனிராஜ் பேசியதாவது:

உலக உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம் 2015-ஆம் ஆண்டை சர்வதேச மண் ஆண்டாக அறிவித்துள்ளது. தற்போது, உலகளவில் 85 கோடி பேர் ஊட்டச்சத்துப் பற்றாக்குறை மற்றும் பட்டினியால் தவித்து வருவதாகப் புள்ளி

விவரங்கள் தெரிவிக்கின்றன. இன்னும் 35 ஆண்டுகளில் உலக மக்கள் தொகை ஆயிரம் கோடியை எட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கேற்ப, உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டியது கட்டாயமாகும். எனவே, மண் வளத்தினைப் பாதுகாக்க அனைத்து வழிமுறைகளையும் தவறாது கடைப்பிடிக்க வேண்டும் என்றார். இதில், மண் வகைகள், மண்ணுக்கேற்ற உரம், பயிர், பசுந்தாள் உரம் உள்ளிடவை குறித்த கருத்துக் காட்சிகள் அமைக்கப்பட்டு, விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை வேளாண் அலுவலர்கள் வசந்தமுருகன், பாலசுப்பிரமணி, ரவிக்குமார், லோகநாதன் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

**காய்கறிகள் சாகுபடி பயிற்சி**

கூடலூர், பந்தலூரில் காய்கறிகள் சாகுபடிக்கான நவீன தொழில்நுட்ப ஒரு நாள் பயிற்சி முகாம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

முகாமிற்கு, தோட்டக் கலை துணை இயக்குநர் ராமசுந்தரம் தலைமை வகித்தார். தோட்டக் கலைத் துறை மூலமாக விவசாயிகளுக்கு வழங்கப்படும் திட்டங்கள் குறித்தும், காய்கறிகள் சாகுபடிக்கான நவீன தொழில்நுட்பங்கள் குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது.

வட்டார தொழில் நுட்ப மேலாளர் க.யமுனப்பிரியா, தோட்டக் கலை ஆராய்ச்சி நிலைய உதவிப் பேராசிரியர் சங்கரி, வேளாண் அலுவலர் ரமேஷ் ஆகியோர் பயிற்சியளித்தனர். முகாமில், கூடலூர், பந்தலூர் பகுதி விவசாயிகள் திரளானோர் கலந்துகொண்டனர்.

**தொடர் மழை: தேயிலை மகசூல் அதிகரிக்க வாய்ப்பு**

குன்னூர் சுற்று வட்டாரப் பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழையால் தேயிலை மகசூல் அதிகரிக்கும் என விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர்.

குன்னூர் சுற்று வட்டாரப் பகுதிகளில் கடந்த 1 வாரமாக பரவலாக பலத்த மழை பெய்து வருகிறது. தொடர் மழை காரணமாக, தேயிலைத் தோட்டங்களில் ஈரப்பதம் அதிகரித்துள்ளதால் தேயிலை விவசாயிகள் தோட்டங்களில் உரமிடும் பணி, பராமரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மேகமூட்டம் அதிகரித்துள்ளதால் வாகன ஓட்டிகள் பகல் நேரத்திலேயே முகப்பு விளக்குகளை எரிய வைத்துக் கொண்டு செல்கின்றனர். தொடர் மழை

காரணமாக, தேயிலை மகசூல் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும், முன்கூட்டியே தோட்டத்தை முறையாகப் பராமரிக்க வேண்டும் எனவும் உபாசி வேளாண் ஆராய்ச்சி மைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**வேளாண் அலுவலர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி**

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் விதைச் சான்று உதவி இயக்குநர்கள், அலுவலர்களுக்கு புத்தாகப் பயிற்சி அண்மையில் நடைபெற்றது. கோவை விதைச் சான்று, அங்ககச் சான்று துறை இயக்குநர் ஜெய்சுந்தர் தலைமை வகித்து, பயிற்சியைத் தொடக்கிவைத்தார்.

சான்று விதை உற்பத்தியில் வயல்களின் தரத்தை ஆராய வேண்டும் என்றும், தொடர் சான்றுப் பணியைத் தொய்வின்றி செய்ய வேண்டும் போன்ற விதைச் சான்று நடைமுறைகளை முழுவீச்சில் கடைப்பிடித்து தரத்தில் குறைவின்றி சான்று பணி தொடர வேண்டும் என்றும் ஜெய்சுந்தர் கேட்டுக் கொண்டார்.

இதைத் தொடர்ந்து, வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் ப.மோகன் சான்று பெற்ற தீவனப் பயிர் விதை உற்பத்தி குறித்து விளக்கினார்.

தமிழ்நாடு கால்நடைப் பராமரிப்புத் துறையின் திட்டப் பணிகளுக்காக இம் மையம் மூலம் சான்று பெற்ற தீவனப் பயிர் விதை உற்பத்தி நடைபெறுவதாகவும், வெண்மை புரட்சிக்குச் சான்று பெற்ற தீவனப் பயிர் விதை உற்பத்தி ஒரு அடித்தளமாக அமையும் என அவர் குறிப்பிட்டார்.

விதை ஆய்வு துணை இயக்குநர் ப.செப்ந்தரராஜன் உரிய விதை விநியோக உரிமம் பெறுதல் குறித்தும், உரிமம் பெற்ற வணிக மையத்தில் தரமான விதைகள் விற்பனை செய்வது குறித்தும் விளக்கினார்.

வேளாண் துணை இயக்குநர் அல்தாப் மாநில அரசின் விதைப் பெருக்கத் திட்டத்தின் செயல்பாடுகள், திட்ட விவரங்களை விளக்கினார். நாமக்கல் விதைச் சான்று உதவி இயக்குநர் எஸ்.எம்.மணிக்குமார், மாவட்டத்தில் விதைச் சான்றளிப்பு பணியின் முன்னேற்றம் குறித்தும், தர மேம்பாட்டுப் பணிகள் குறித்தும் விளக்கினார். விதைப் பரிசோதனை நிலைய அலுவலர்கள் க.ராமச்சந்திரன், ராஜேந்திரன் ஆகியோர் விதைப் பரிசோதனையின் முக்கியத்துவம் குறித்து விளக்கினர். இதற்கான ஏற்பாடுகளை விதைச் சான்று அலுவலர்கள் தி.கெப்தமன், த.யுவராஜ், கை.முருகேசன் ஆகியோர் செய்தனர்.

இதில், வேளாண் அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர்கள் அழகுதுரை, சர்மிளா ஆகியோர் தொழில்நுட்ப விளக்கம் அளித்தனர்.

**தொடர் மழையால் அழுகிய சிறுகிழங்குகள்**

திருநெல்வேலி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் வயல்களில் தண்ணீர் தேங்கி, பயிரிடப்பட்ட சிறுகிழங்குகள் அழுகிவிட்டன. இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். அம்பாசமுத்திரம், ஆம்பூர், ஆழ்வார்குறிச்சி, கடையம், சம்பன்குளம், கோவிந்தப்பேரி உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 500 ஏக்கருக்கும் மேற்பட்ட விவசாய நிலத்தில் செப்டம்பர் மாதத்தில் சிறுகிழங்கு பயிரிட்டனர். அணையில் இருந்து தண்ணீர் திறப்பது தாமதமானதாலும், மழை தாமதமானதாலும் சிறுகிழங்குகள் சரியாக விளையவில்லை. பின்னர், அணைகளில் இருந்து தாமதமாக தண்ணீர் திறந்துவிடப்பட்டதையடுத்து, விவசாயிகள் சிறுகிழங்குச் செடிகளை அப்படியே அழித்து நெல் நடவுப் பணியில் ஈடுபட்டனர். இதனால் அவர்களுக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டது. இந்நிலையில், தாமதமாக சிறுகிழங்கு பயிரிட்டவர்களும் தற்போது பெய்து வரும் தொடர்மழையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். மழை தொடர்ந்து பெய்து வருவதால் தண்ணீர் வயலில் தேங்கி நிற்கிறது. இதனால் சிறுகிழங்குகள் அழுகும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், கிழங்கு விளைந்தும் பயனில்லாமல் அதிகப்படியாக கிழங்குகளை கழிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து ராமலிங்கபுரத்தைச் சேர்ந்த விவசாயி மாரியப்பன் கூறியதாவது:

ஒரு ஏக்கருக்கு சிறுகிழங்கு பயிரிட்டு, எடுப்பது வரை சுமார் ரூ.25 முதல் 30 ஆயிரம் வரை செல்வாகிறது. மேலும், கிழங்கு ஈரமாக இருப்பதால் சந்தையில் விலை மிகவும் குறைவாகவே உள்ளது. ஈரமான கிழங்கு சந்தையில் ஒரு கிலோவுக்கு 10 முதல் 15 ரூபாய் வரை மட்டுமே விலை போகிறது. நன்கு விளைந்து காய்த்த கிழங்குகள் 30 முதல் 35 ரூபாய் வரை விலை போகிறது. இதனால் சிறுகிழங்கு பயிரிட்டு விவசாயம் செய்வதற்கு ஆகிய செலவுப் பணம்கூட கிடைக்காத நிலை உள்ளது. மேலும், பயிர்க் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு 2014-15ஆம் ஆண்டிற்கான காப்பீட்டுத் தொகையை வழங்க ஆட்சியர் உத்தரவிட்டும் இன்னும் கிடைக்கவில்லை என்றார்.

**விவசாயிகள் நிவாரணம் பெற விண்ணப்பம் விநியோகம்**

புதுச்சேரியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் நிவாரணத் தொகை பெறுவதற்கான விண்ணப்பங்கள் செவ்வாய்க்கிழமை முதல் விநியோகம் செய்யப்படும் என வேளாண்துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வேளாண் துறை கூடுதல் இயக்குநர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: வடகிழக்குப் பருவ மழை காரணமாக பலத்த காற்று மற்றும் கன மழையால் புதுச்சேரி பகுதியில் 6,711 ஹெக்டேர் பரப்பளவுக்கு பாதிப்புக்கு உள்ளானது. மத்தியக் குழு பாதிப்புக்குள்ளான பயிர்களை பார்வையிட்டு சென்றுள்ளது.

முதல்வர் பாதிப்புக்குள்ள பயிர்களான நெல், கரும்பு, பருத்தி, வாழை, மரவள்ளி மற்றும் இதர கிழங்கு வகைகள், வெற்றிலை, காய்கறி பயிர்கள் மற்றும் மலர் செடிகளுக்கு நிவாரண தொகையை அறிவித்துள்ளார்.

அதன் தொடர்ச்சியாக, பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு நிவாரண தொகை வழங்குவதற்கான விண்ணப்பங்களை வேளாண் துறை உழவர் உதவியகம் மூலம் 7.12.2015 முதல் வழங்க ஏற்பாடு செய்துள்ளது. அதனால் விவசாய பெருமக்கள் உழவர் உதவியகத்தை அணுகி விண்ணப்பங்களை பெற்று டிசம்பர் 16 ஆம் தேதிக்குள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அந்தந்த உழவர் உதவியகத்தில் சஸ்மர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள.

மேலும் பெறப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலனைக்குப் பிறகு டிசம்பர் 25 ஆம் தேதி முதல் 29 ஆம் தேதி வரை அந்தந்த உழவர் உதவியகத்தில் சமுதாய தணிக்கைக்கு உட்படுத்தப்படும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகரன்

**குமரி மாவட்டத்தில் மீண்டும் கனமழை மீனவர்களுக்கு எச்சரிக்கை**



குமரி: கன்னியாகுமரி மாவட்டத்தில் இன்று அதிகாலை முதல் கனமழை கொட்டி வருகிறது. கனமழை எதிரொலியாக கடலில் அலைகள் அதிக சீற்றத்துடன் காணப்படுகின்றன. மீனவர்கள் எச்சரிகையுடன் செயல்படும் படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. குமரி மாவட்டத்தில் கடந்த 2 மாதங்களாக மழை தொடர்ந்து பெய்து வந்த நிலையில் கடந்த சில தினங்களாக மழை சற்று ஓய்திருந்ததது. இந்நிலையில் இன்று அதிகாலை முதல் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் மழை வெளுத்து வாங்குகிறது. மாவட்டத்தின் முக்கிய நீர் ஆதாரங்களான பேச்சுப்பாறை, பெருஞ்சாணி, சிற்றார் ஒன்று மற்றும் சிற்றார் இரண்டு, மாம்பழத்துறை ஆறு, பொய்கை அணையின் நீர் பிடிப்பு பகுதிகளிலும் மழை கொட்டி வருகிறது. ஏற்கனவே பொய்கை அணையை தவிர அனைத்து அணைகளும் நிரம்பி வழியும் நிலையில் குளங்கள், ஏரிகள் உள்ளிட்ட அனைத்து நீர் நிலைகளிலும் நிரம்பியுள்ளன. கடற்கரை பகுதிகளில் மணிக்கு 45 முதல் 55 கிலோமீட்டர் வேகத்திற்கு தரைகாற்று வீசும் எனவும், கடலோர மாவட்டங்களில் கனமழை மற்றும் மிக கனமழை கொட்டும் என்றும் கடல் தகவல் மையம் எச்சரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**பூண்டு விலை கடும் உயர்வு**



சென்னை: மாநிலத்தில் பருப்பு விலையை தொடர்ந்து பூண்டு விலை வரலாறு காணாத வகையில் கிலோ ரூ.250 வரை உயர்ந்துள்ளது. தமிழகத்தில் பருப்பு விலை உயர்வால், அதன் விலையை கட்டுப்படுத்த மத்திய அரசு வெளிநாடுகளில் இருந்து பருப்பை இறக்குமதி செய்தது. மேலும், சோதனை

நடத்தி பதுக்கி வைத்திருந்த பருப்பை பறிமுதல் செய்தது. இதனால், துவரம் பருப்பு பழைய விலைக்கே திரும்பியது. தற்போது பூண்டு விலை வரலாறு காணாத வகையில் அதிகரிக்க தொடங்கியுள்ளது. தமிழகத்தில் தேனி, கம்பம், போடி உள்ளிட்ட பகுதியில் பூண்டு விளைச்சல் குறைந்துள்ளது. இதனால் பூண்டுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக கடந்த வாரம் ரூ.150க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ மலைப்பூண்டு தற்போது ரூ.250ஆக உயர்ந்துள்ளது. மலைப்பூண்டு 2ம் ரகம் ரூ.120லிருந்து ரூ.220 ஆக விலை அதிகரித்துள்ளது. நாட்டுப்பூண்டு ரூ.120லிருந்து 200 ஆகவும், இரண்டாம் ரகம் ரூ.100லிருந்து 170 ஆகவும் விலை உயர்ந்துள்ளது. பூண்டையும் வடமாநிலங்களில் அதிக அளவில் பதுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

**கடலோர மாவட்டத்தில் 3 நாட்களுக்கு கனமழை: வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை**



சென்னை: தென்மேற்கு வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வுநிலை அதே இடத்தில் நீடிப்பதால் 3 நாட்களுக்கு கடலோர மாவட்டங்களில் கனமழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. குமரிக் கடல் பகுதியில் கடந்த இரண்டு நாட்களாக நிலை கொண்டு இருந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை மேற்கு நோக்கி நகர்ந்து மாலத்தீவு பகுதிக்கு சென்றது. அதே நேரத்தில் நேற்று முன்தினம் தென் மேற்கு

வங்கக் கடலில் புதிய காற்றழுத்தம் உருவானது. இதன் காரணமாக தமிழகத்தில் நேற்று அனேக இடங்களில் மழை பெய்தது.

இந்நிலையில், தென்மேற்கு வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை அதே இடத்தில் நீடிப்பதை அடுத்து 3 நாட்ௌகளுக்கு மழை பெய்யும். சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் கன மழை அல்லது மிக கனமழை பெய்யும். தமிழகத்தின் அனேக இடங்களில் மழை பெய்யும்.

வங்கக் கடலில் உருவாகியுள்ள காற்றழுத்தம் காரணமாக 9,10,11ம் தேதிகளில் சென்னை மற்றும் அதை ஒட்டிய பகுதிகளில் இடியுடன் கூடிய கனமழை பெய்யும் என்று பிபிசி தமிழோசை ஊடகம் ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது. இதனால், தமிழகத்தில் மீண்டும் கனமழை பெய்து பாதிப்பு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

மழை அளவு: பாபநாசத்தில் 130 மிமீ மழை பெய்துள்ளது. சோழவரம் 70 மிமீ, பட்டுக்கோட்டை, தாமரைப்பாக்கம், சத்திரப்பட்டி, திருவள்ளூர், திருவாலங்காடு, மதுக்கூர், வேதாரண்யம் 60 மிமீ, செங்குன்றம், பழனி, பூண்டி, அதிராம்பட்டினம், வேடச்சந்தூர், பூந்தமல்லி, திண்டுக்கல், மணப்பாறை, பொன்னேரி, உடுமலைப் பேட்டை 50 மிமீ, காமாட்சிபுரம், ராதாபுரம், மணல்மேல்குடி, புழல், மணிமுத்தாறு, செம்பரம்பாக்கம், முத்துப்பேட்டை, மாதவரம், சென்னை டிஜிபி அலுவலகம், சென்னை விமான நிலையம், திருமயம், ராமேஸ்வரம், தாம்பரம், சிதம்பரம், வடசென்னை 30 மிமீ மழை பெய்துள்ளது.

**வீடு, வாகனம் பழுது பார்ப்பதற்கு வைப்பு நிதியில் ரூ5 ஆயிரம் முன்பணம்: பி.எப். சென்னை மண்டல ஆணையர் தகவல்**




சென்னை: மழை வெள்ளத்தால் வீடு, வாகனம் பழுது ஏற்பட்டு இருந்தால் அவற்றை ரிப்பேர் செய்ய, வைப்பு நிதியிலிருந்து ரூ. 5 ஆயிரம் பெற ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. இது தொடர்பாக சென்னை மண்டல வைப்பு நிதி ஆணையர் எஸ். டி. பிரசாத் வெளியிட்ட அறிக்கை:அண்மையில் சென்னையில் பெய்த பெரு மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தால் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. வைப்புநிதி சந்தாதாரர்கள் தங்களின் வீடு, வாகனம் ஆகியவை வெள்ளத்தால் பழுது ஏற்பட்டு இருந்தால் அவற்றை சீர்செய்ய வைப்புநிதியிலிருந்து ரூ. 5 ஆயிரம் முன்பணம் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சந்தாதாரர்கள் தங்களின் வைப்புநிதி தொகையிலிருந்து ரூ. 5 ஆயிரம் அல்லது 50 சதவீத தொகை இதில் எது குறைவோ அதை பெற்றுக் கொள்ளலாம். தாங்கள் குடியிருக்கும் பகுதி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதி என்று மாநில அரசு அறிவித்த அறிவிப்பின் நகல், வெள்ளத்தால் பாதிப்பு ஏற்பட்டதற்கான அரசு சான்றிதழ் ஆகிவற்றுடன் படிவம் 31ஐ பூர்த்தி செய்து இதற்காக விண்ணப் பிக்க வேண்டும். 4 மாதங்கள் வரை இந்த முன் பணம் வழங்கப்படும். இவ்வாறு பிரசாத் கூறியுள்ளார்.

**மருத்துவ உலகின் அதிசயம் நிலவேம்பு கஷாயம்!**




நிலவேம்பு கஷாயம் என்பது ஒன்பது வகை மூலிகைகள் அடங்கிய அருமருந்து. நம் பாரம்பரிய மருத்துவர்கள், உயிர்களை காக்க உலகத்துக்கு கண்டறிந்து தந்திருக்கும் மாபெரும் கொடை இது. என்னென்ன பலன்கள்? உடல்வலி, மூட்டுவலி அறவே நீங்கும். சர்க்கரை நோய் வராமல் தடுக்கும்.நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்யும். காய்ச்சலால் அவதியுறுபவர்கள் தினமும் காலை மற்றும் மாலை வேளைகளில் முப்பது மில்லி அளவுக்கு ஒருவாரம் இந்த கஷாயத்தை அருந்திவந்தால் காய்ச்சல் வந்த தடம் தெரியாமல் ஓடிவிடும். காபி, டீ அருந்துவதை போல தினமும் நிலவேம்பு கஷாயத்தை அருந்தி வருபவர்களை சீஸன் நோய்கள் அண்டவே அண்டாது. எப்படி செய்வது? நிலவேம்பு (சிறியாநங்கை), வெட்டிவேர், விலாமிச்சம் வேர், பற்படாகம், பேய்புடம், கோரைக்கிழங்கு, சந்தனச்சிறாய், சுக்கு, மிளகு ஆகியவற்றை அருகிலிருக்கும் நாட்டு மருந்துக் கடைகளில் கேட்டு வாங்கிக் கொள்ளவும்.இந்த ஒன்பது வகை மூலிகைகளை நன்கு உலர வைத்து சம அளவில் கலந்து அரைத்துப் பொடியாக்கி வைத்துக் கொள்ளவும். இந்தப் பொடியை தண்ணீரில் கலந்து நன்கு கொதிக்க வைக்கவும். காய்ச்சி வடிகட்டி கஷாயமாக மிதமான சூட்டில் பருகினால் போதும். கவனிக்க வேண்டியவை பத்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு தரவேண்டுமானால், முறையான மருத்துவ ஆலோசனை பெறவேண்டும். மற்றவர்கள் அருந்துவதில் பிரச்னை இல்லை.கஷாயம், காய்ச்சப்பட்டு நான்கு மணி நேரத்துக்குள் பருகிவிட

வேண்டும். இல்லையேல் அதிலிருக்கும் மருத்துவக் குணங்கள் முழுமையான பயனைத் தராது.

**ரத்த ஓட்டத்தை சீராக்கும் சாமந்தி**




சாமந்தி செடியானது சூரியகாந்தி வகையை சேர்ந்தது. மஞ்சள், சிவப்பு போன்ற நிறத்தை உடைய அழகான மலர். சாமந்தி செடி மணம் தரக்கூடியது. இதற்கு செவ்வந்தி என்ற பெயர் உண்டு. இதன் இலைகள், பூக்கள் மருந்தாகிறது. ரத்த ஓட்ட குறைபாடுகளை போக்கும் அற்புத மருந்தாகிறது. சாமந்தியானது மூளை காய்ச்சலை குணப்படுத்தும். ரத்த அழுத்தத்தால் ஏற்படும் ஒற்றை தலைவலியை சரிசெய்யும் தன்மை இதில் உள்ளது. சாமந்தி செடியை பயன்படுத்தி சளி, காய்ச்சல், இருமல் மற்றும் மூட்டு வலியை போக்கும் தேனீர் தயாரிக்கலாம். ஒருபிடி அளவுக்கு சாமந்தி இலை மற்றும் தண்டு எடுத்துக்கொள்ளவும். அதனுடன் சிறிது மிளகுப் பொடி சேர்த்து ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி தேன் சேர்த்து காலை, மாலை வேளைகளில் குடித்தால் இடைவிடாத இருமல் சரியாகும். நெஞ்சக சளியை கரைத்து வெளியே தள்ளும். காய்ச்சலை தணிக்கும். உடல் வலி சரியாகும். மூட்டு வலி குணமாகும்.

சாமந்தி பூவை பயன்படுத்தி பால்வினை நோயை குணப்படுத்தும், ரத்த ஓட்டத்தை சீர்படுத்தும் மருந்து தயாரிக்கலாம். ஒரு சாமந்தி பூவின் இதழ்களை எடுத்துக் கொள்ளவும், அதனுடன் சிறிது மிளகுப் பொடி, அரை ஸ்பூன் பனங்கற்கண்டுடன் ஒரு டம்ளர் நீர் சேர்த்து கொதிக்க வைக்கவும். இதை

வடிகட்டி குடித்தால், ரத்த ஓட்டம் சீராகும். ஒற்றை தலைவலி குணமாகும். மஞ்சள் காமாலைக்கு மருந்தாகிறது. கல்லீரல் பலப்படும். சாமந்தி பூவை அதிகளவில் பயன்படுத்தினால் அது வாந்தியை உண்டாக்கும். எனவே, அதிகளவில் பயன்படுத்த கூடாது. சர்க்கரை நோயாளிகள் பனங்கற்கண்டுக்கு பதிலாக பூண்டு பயன்படுத்தலாம். பல்வேறு நன்மைகளை கொண்ட சாமந்தி, ரத்த நாளங்களில் கொழுப்பு படிவதை தடுத்து மாரடைப்பு ஏற்படும் நிலையை போக்கும். கால்களில் நரம்புகள் முடிச்சுகளாகி விடுவதால் ஏற்படும் வலி, புண்களை குணப்படுத்தும். சாமந்தி இலைகளை பயன்படுத்தி தோல் அரிப்பு, சிவப்பு தன்மை மற்றும் அக்கி புண்களுக்கான மருந்து தயாரிக்கலாம். சாமந்தி இலைகளை பசையாக்கி எடுத்துக் கொள்ளவும். இதனுடன், பூக்களின் இதழ்களை மசித்து சேர்க்கவும். இவைகளுடன் தேங்காய் எண்ணெய் சேர்த்து தைலப்பதத்தில் காய்ச்சி மெல்லிய துணியில் வடிகட்டி எடுத்துகொள்ளவும். இதை மேல் பூச்சாக பயன்படுத்தும்போது தோல் நோய்கள் குணமாகும். சேற்று புண், அக்கி புண்கள் சரியாகும். வலி நிவாரணியாகவும் விளங்குகிறது. பூஞ்சை காளான்களை போக்கும். நுண் கிருமிகளை அழிக்கும்.

**திருவிழாக்கள், முகூர்த்தம் இல்லாததால் காய்கறிகள் விலை 10 சதவீதம் சரிவு**



தமிழகத்தில் திருவிழா மற்றும் முகூர்த்தம் இல்லாததால் காய்கறிகளின் தேவை குறைந்துள்ளது. இதனால் காய்கறிகளின் விலை 10 சதவீதம் சரிந்துள்ளது. தமிழகத்தில் பெய்து வரும் மழையால் காய்கறிகளின் விளைச்சல் பாதித்துள்ளது. மார்க்கெட்டுக்கு வழக்கத்தை விட குறைந்தளவே காய்கறிகள்

விற்பனைக்கு வருகின்றன. தொடர்ச்சியான சுபமுகூர்த்த நாட்கள் வந்ததால் கடந்த மாதம் 20ம் தேதி முதல் டிசம்பர் 2ம் தேதி வரை அனைத்து காய்கறிகளின் விலையும் உயர்ந்தது. தற்போது முகூர்த்தம் இல்லாததால் காய்கறிகளின் விலை சரிந்து வருகிறது. இது குறித்து சேலம் ஆனந்தா மார்க்கெட் காய்கறி வியாபாரிகள் கூறியதாவது: சேலம் ஆனந்தா பகுதியில் உள்ள மார்க்கெட், வ.உ.சி., மார்க்கெட் உள்ளிட்ட பகுதிகளில் 300க்கும் மேற்பட்ட காய்கறி கடைகளுக்கு தினசரி 120 முதல் 150 டன் காய்கறிகள் விற்பனைக்கு வரும். கடந்த சில நாட்களாக தமிழகம் முழுவதும் பெய்து வரும் தொடர் மழையால், காய்கறிகளின் விளைச்சல் பாதித்துள்ளது. இதனால் சேலம் மார்க்கெட்டுக்கு தற்போது 60 முதல் 80 டன் காய்கறிகள் விற்பனைக்கு வருகின்றன. கடந்த மாதம் முகூர்த்தம் இருந்ததால், காய்கறிகளின் விலை வழக்கத்தை விட 40 முதல் 50% உயர்ந்து இருந்தது. திருவிழாக்கள், முகூர்த்தம் இல்லாததால், காய்கறிகளின் விலை பத்து சதவீதம் குறைந்துள்ளது. அதேநேரத்தில் தொடர் மழையாலும், ரோடுகள் சேறும், சகதியுமாக இருப்பதாலும் மார்க்கெட்டுக்கு வருபவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. பலர் கடையை மூடியுள்ளனர். இந்த நிலைமை சீராக இன்னும் இருபது நாட்களுக்கு மேலாகும். ரூ.50க்கு விற்ற ஒரு கிலோ தக்காளி நேற்று நிலவரப்படி ரூ.20 முதல் ரூ.25 எனவும், ரூ.40க்கு வெண்டைக்காய் ரூ.30 முதல் ரூ.35 எனவும், ரூ.40க்கு விற்ற புடலங்காய் ரூ.30 முதல் ரூ.35 எனவும், ரூ.45க்கு கேரட் ரூ.30 முதல்ரூ.35 எனவும், ₹ 10க்கு விற்ற ஒரு முருங்கைக்காய் ரூ.8 எனவும், ரூ.20 முதல் ரூ.22 விற்ற தேங்காய் ரூ.15 முதல் ரூ.16 எனவும்,ரூ.100 முதல் ₹ 120 விற்ற கத்தரிக்காய் ரூ.70 முதல் ரூ.80 என விற்கப்படுகிறது. இவ்வாறு வியாபாரிகள் கூறினர்.

**முட்டை விலை உயர்வு 370 காசாக உயர்ந்தது**



நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை மேலும் 5 காசுகள் உயர்ந்து 370 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலையில் மேலும் 5 காசு உயர்த்தப்பட்டுள்ளது. இதையடுத்து ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 370 காசுகள் என என்.இ.சி.சி. நேற்று நிர்ணயம் செய்தது. மற்ற மண்டலங்களில் முட்டை விலை உயர்வு, சென்னையில் மழை வெள்ளம் வடிந்ததால் முட்டை விற்பனை அதிகரிப்பு போன்ற காரணங்களால் முட்டை விலை உயர்த்தப்பட்டுள்ளது. ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ.56, ஒரு கிலோ கறிக்கோழி ரூ.64 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மற்ற மண்டலங்களில் முட்டை விலை விபரம் (காசுகளில்) : ஐதராபாத்- 374, விஜயவாடா- 362, பர்வாலா- 387, மும்பை- 414, மைசூர்- 383, பெங்களுரு- 390, கொல்கத்தா- 400 காசுகள்.

**தொடர் கனமழை பெய்ததால் புதுச்சேரியில் 78 ஏரிகள் நிரம்பின**

புதுச்சேரியில் பெய்து வந்த கனமழை காரணமாக 78 ஏரிகள், 23 படுகை அணைகள் நிரம்பியுள்ளன.புதுச்சேரி பொதுப்பணித்துறையின் கீழ் மொத்தம் 84 ஏரிகள் உள்ளன. கடந்த நவம்பர் மாதம் முதல் பரவலாக கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக ஊசுட்டேரி, பாகூர், ஆலங்குப்பம், காட்டேரிக்குப்பம் புதுதாங்கல், பழந்தாங்கல், குப்பம், காட்டேரிக்குப்பம், சுத்துக்கேணி ஓட்டேரி, தேத்தாம்பாக்கம், சுத்துகேணி பெரியேரி, தொண்டமாநத்தம், கடப்பேரி, சேதராப்பட்டு பெரியேரி, சேதராப்பட்டு சித்தேரி, துத்திப்பட்டு, கரசூர், வம்புபட்டு, கொடாத்தூர், கூனிச்சம்பட்டு புது

ஏரி, சோம்பட்டு, வாதானூர், முருங்கப்பாக்கம், ஒழந்தை ஏரி, கனகனேரி, அபிஷேகப்பாக்கம், கோர்க்காடு, நல்லூர், பண்டசோழ நல்லூர், நெட்டப்பாக்கம், மடுகரை, மணமேடு, கடுவனூர், பனையடிக்குப்பம், கரையாம்புத்தூர் உட்பட 78 ஏரிகள் நிரம்பி உள்ளன.
இதேபோல் சங்கராபரணி, தென் பெண்ணையாறு, மலட்டாறு, குடுவையாறு, பம்பையாறு உள்ளிட்டவற்றில் அமைக்கப்பட்டுள்ள 23 படுகை அணைகள் அபாய அளவை காட்டிலும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இருப்பினும் கடந்த 2 நாட்களாக மழை குறைந்ததால் தாழ்வான பகுதிகளில் தேங்கி இருந்த மழை நீர் வடிந்துவிட்டன. இதனால் புதுச்சேரி இயல்பு நிலைக்கு திரும்பி உள்ளது. இந்நிலையில் மீண்டும் வங்கக் கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளதால் மேலும் 2 நாட்களுக்கு மழை நீடிக்கும் என்று சென்னை வானிலை மையம் அறிவித்துள்ளது.
இதன் காரணமாக புதுச்சேரியில் கனமழை தொடர்ந்தால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை மீண்டும் பாதிக்கப்படும் சூழ்நிலை உருவாகும்.
இதனிடையே ஏரிகள் மற்றும் அணைக்கட்டுகளில் நீர்மட்ட அளவை பொதுப்பணித்துறையினர் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

மாலைமலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

**தேனி மாவட்டத்தில் விடிய விடிய கன மழை: சுருளி அருவியில் வெள்ளப்பெருக்கு**



வடகிழக்கு பருவமழை காரணமாக தேனி மாவட்டத்தில் தொடர் மழை பெய்து வந்தது. இதனால் மாவட்டத்தில் உள்ள அணைகள், குளங்கள், அருவிகளில் அதிக அளவு தண்ணீர் வரத்து வந்தது. ஏற்கனவே பெரியாறு அணையின் நீர்ப்பிடிப்பு பகுதியில் கன மழை பெய்வதால் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதனால் கரையோர பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இந்நிலையில் நேற்று கம்பம், கூடலூர், தேனி, உத்தமபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் கன மழை பெய்தது.

கனமழை காரணமாக சுருளி அருவியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் இந்த அருவியில் பொதுமக்கள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. தற்போது சபரிமலை சீசனாக இருப்பதால் அங்கு செல்லும் பக்தர்கள் அனைவரும் சுருளி அருவியில் நீராடி செல்வது வழக்கம். அவர்கள் அருவியில் குளிக்க தடை விதிக்கப்பட்டதால் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

இதேபோல் பெரியகுளம் மற்றும் சுற்றுவட்டார பகுதியில் பெய்த கன மழை காரணமாக கும்பக்கரை அருவியிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இங்கு குளிப்பதற்கு 22 –வது நாளாக தடை விதிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இன்றும் பல்வேறு பகுதிகளில் மழை பெய்தபடி இருந்ததால் ஒரு சில பள்ளிகளில் விடுமுறை அளிக்கப்பட்டது.

வைகை அணை 4.6, கூடலூர் 12, சண்முகாநதி அணை 45, உத்தமபாளையம் 8.4, வீரபாண்டி 8, கொடைக்கானல் 22 மி.மீ. மழை அளவு பதிவாகி உள்ளது.

**திருவையாறு பகுதியில் 100 ஏக்கர் சம்பா பயிர்கள் மழை நீரில் மூழ்கியது**



தஞ்சை மாவட்டம் திருவையாறு மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் கடந்த ஒரு வாரமாக தொடர் மழை பெய்து வருகிறது. இதனால் சுமார் 100 ஏக்கர் சம்பா பயிர்கள் மழை நீரில் மூழ்கி உள்ளது. திருவையாறு, புனவாசல், சிறு

புலியூர், திங்களூர், விளாங்குடி, வில்லிய நல்லூர் உள்ளிட்ட 10 கிராமங்கள் மற்றும் திருவையாறு நகரில் புதியதாக உருவாக்கப்பட்டுள்ள ராஜா நகர், மெசியா நகர், யசோதா நகர், அந்தணர் குறிச்சி ஆகிய பகுதிகளில் குடியிருப்புகளில் மழை நீர் தேங்கி உள்ளது. தஞ்சை–பெரம்பலூர் தேசிய நெடுஞ்சாலையில் திருவையாறு முன்சீப் கோர்ட்டு முன்பு உள்ள 100 ஆண்டுகளுக்கு மேலான தூங்கு மூஞ்சி மரம் இந்த மழையால் சாய்ந்தது.

இந்த மரம் எந்த நேரமும் விழுந்து விடும் அபாயத்தில் உள்ளது. இதன் அருகில் பஸ் நிறுத்தம், மின் வாரிய அலுவலகம் என மக்கள் கூடும் இடமாக இருப்பதால் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் நடவடிக்கை எடுத்து மரத்தை வெட்டி அப்புறப்படுத்த வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### 12 மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை



கனமழை காரணமாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், ராமநாதபுரம், புதுக்கோட்டை, திண்டுக்கல், தூத்துக்குடி உள்ளிட்ட 12 மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. பலத்த மழை தொடர்வதால், பள்ளி, கல்லூரி வளாகங்களைத் தூய்மைப்படுத்துவதற்காக, விடுமுறை அறிவிக்கப்படுவதாக அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் அறிவித்துள்ளனர். பல குடியிருப்புப் பகுதிகளில் வெள்ளம் வடிந்தாலும், பள்ளி மைதானங்களில் தேங்கியுள்ள வெள்ளத்தை வெளியேற்றும் பணியும், சேதங்களையும் ஆய்வு செய்யும் பணியும் நடைபெறும் என கல்வித்

துறையினர் தெரிவித்தனர். தொடர் மழை காரணமாக, நவம்பர் 6-ஆம் தேதிக்குப் பிறகு 3 நாள்கள் மட்டுமே பள்ளி, கல்லூரிகள் இயங்கியுள்ளன. இதனால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பொதுத்தேர்வு எழுதுவோரும் பெரிதும் சிரமம் அடைந்துள்ளனர். வரலாறு காணாத கனமழையால் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் கடந்த ஒரு மாத காலமாக பள்ளி, கல்லூரிகள் இழுத்து மூடப்பட்டுள்ளன. அனைத்து பல்கலைக் கழகங்களிலும் தேர்வுகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் மழை தொடர்வதால் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் இன்றும் நாளையும் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், நெல்லை மாவட்டங்களில் இன்று பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டை, சிவகங்கை, திண்டுக்கல், கன்னியாகுமரி மாவட்டங்களில் பள்ளிகளுக்கு மட்டும் இன்று விடுமுறை விடப்பட்டுள்ளது. இதேபோல் புதுவையின் காரைக்காலில் பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை விடப்பட்டுள்ளது.

## வெள்ளத்தில் ஆவணங்களை இழந்தவர்களுக்கு வரும் 14ம் தேதி சிறப்பு முகாம்!

**சென்னை:** கனமழை வெள்ளத்தால் முக்கிய ஆவணங்களை இழந்தவர்களுக்கு வரும் 14-ம் தேதி முதல் இரு வாரங்களுக்கு சிறப்பு முகாம்கள் நடத்தப்படும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்," வெள்ளத்தின் காரணமாக பொதுமக்கள் தங்களது நிலம் மற்றும் வீட்டு மனைப் பட்டா, கல்வி சான்றிதழ், எரி வாயு இணைப்பு அட்டை, ஆதார் அடையாள அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, வங்கி கணக்குப் புத்தகம், நிலம் / வீட்டு கிரையப் பத்திரம் உள்ளிட்ட ஆவணங்களை இழந்துள்ளனர் என தகவல் கிடைக்க பெற்றுள்ளது. இந்த ஆவணங்களை இழந்துள்ள பொது மக்களுக்கு அவற்றின் நகல்களை வழங்குவதற்கான சிறப்பு முகாம்கள் வருவாய் வட்டங்களிலும், கல்வி சான்றிதழ்களுக்கு, பள்ளி மற்றும் கல்லூரிகளிலும் வருகின்ற 14.12.2015 முதல் இரண்டு வாரங்களுக்கு நடத்தப்படும்.



இம்முகாம்களில், தமிழ்நாடு அரசின் பல்வேறு துறை அதிகாரிகளும், மத்திய அரசின் தொடர்புடைய நிறுவனங்களின் அதிகாரிகளும் கலந்து கொண்டு பொதுமக்களிடமிருந்து விண்ணப்பங்களை பெற்று ஒரு வாரத்திற்குள்ளாக நகல் ஆவணங்களை கட்டணமின்றி வழங்குவர். சிறப்பு முகாம்களில் மட்டுமன்றி, பொதுமக்கள் விண்ணப்பங்களை பொது சேவை மையங்கள் மூலமாகவும் கொடுத்து நகல் ஆவணங்களைப் பெறலாம். தமிழ்நாடு பத்திரப் பதிவுச் சட்டம் 1908 பிரிவு 57(5)-ன்படி, இச்சிறப்பு முகாம்களில் விண்ணப்பித்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் நிலம்/வீட்டுமனை சொத்து தொடர்பான பத்திர நகல்கள் யாவும் மூல ஆவணங்களாகக் கருதப்படும். ஆட்டோ ஒட்டுநர்கள் பலர் ஒட்டுநர் உரிமச் சான்று மற்றும் வாகனப் பதிவுச் சான்று (ஆர்.சி புக்) ஆகியவற்றை இந்த மழை வெள்ளத்தால் இழந்துள்ளனர். இந்த ஆவணங்களும் இதே நடைமுறைப்படி வழங்கப்படும்" என்று கூறியுள்ளார்.

**சென்னை வெள்ளம்: அகிலேஷ் யாதவ் ரூ. 25 கோடி நிதியுதவி!**



**லக்னோ:** சென்னை வெள்ள நிவாரணத்திற்கு 25 கோடி ரூபாய் வழங்குவதாக உத்தரபிரதேச முதலமைச்சர் முதலமைச்சர் அகிலேஷ் யாதவ் அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது ட்விட்டர் பக்கத்தில், " சென்னையில் மேற்கொள்ளப்பட்டும் வெள்ள நிவாரண நடவடிக்கைகளுக்கு உதவிடும் வகையில் நாங்கள் ( உ.பி. அரசு ) ரூ. 25 கோடி ரூபாய் வழங்குவதாக அறிவித்துள்ளோம்.

சென்னை வெள்ளத்தை சமாளிக்க தன்னார்வலர்கள், ராணுவத்தினர் மற்றும் சமூக வலைத்தளங்கள் காட்டிய உணர்வுகளுக்கு எங்களது வணக்கங்கள்! ' என குறிப்பிட்டுள்ளார்.